விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 05 வியாழக்கிழமை (22.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307




# எதிர்க்கட்சி பொது வேட்பாளராக போட்டியிட பொன்சேகா இணக்கம்!

## சிறிகொத்தாவிலிருந்து தகவல் கசிவு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பின் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு முன்னாள் இராணுவத்தளபதியும் பாதுகாப்பு தலைமை அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகா இணக்கம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிக்கொத்தாவை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. (14ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு சிறுபான்மை கட்சிகள் இணைந்து கூட்டமைப்பை கட்டியெழுப்ப இணக்கம்

(கொழும்பு)

தமிழ் பேசும் நான்கு சிறுபான்மைக் கட்சிகள் இணைந்து கூட்டமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதற்கான இணக்கத்தை வெளியிட்டிருப்பதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்தக் கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக முன்நின்று செயற்பட்டுவருகிறது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் முஸ்லிம் காங்கிரஸ் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதுடன் இந்தக் கட்சிகள் கொள்கை ரீதியாக இணக்கத்தை வெளியிட்டிருப்பதாக காங்கிரஸின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளுடன் இதுகுறித்து பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். வடக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தகாலத்தின் போது இலங்கைக்கு இந்தியா ஆயுதம் வழங்கியது உண்மையே

### இந்திய கொள்கை ஆய்வாளர் தகவல்

(சென்னை)

யுத்தத்தில் வெற்றி பெறுவதை விட சமாதானத்தை வெற்றி கொள்வதே மிகவும் சிக்கலானது என இந்திய கொள்கை ஆய்வு மத்திய நிலையத்தின் உறுப்பினரான பேராசிரியர் பிரம்மா செல்லசாமி தெரிவித்துள்ளார். சமூகத்தினுள் கூட்டு வன்முறைகளை கையாளும் எந்த குழுவும் நீதிக்கு முரணானதே எனவும் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்தகாலத்தில் சரணடைந்த விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கொடுமையாக கொல்லப்பட்டமை உண்மையே என அவர் (14ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல் மூன்று பேர் கைது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான கொகுவளையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தேடுதலில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் நடத்திய தேடுதலில் இவர்கள் கைது (14ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபையின் முதலாவது அமர்வை எதிர்வரும் 27ஆம் திகதி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் கூடுகிறது.

யாழ். மாநகரசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி கூடவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

இதேவேளை கலாசார விழுமியங்களையும் பண்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு மக்களின் தேவைகளை (14ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியம் மறுத்தால் இந்திய அரசாங்கம் கடன் வழங்கும்

### இலங்கை நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தால் இந்திய மத்திய அரசு இலங்கைக்கு குறித்த கடன் தொகையை வழங்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பிரச்சினைகளை ஏற்படுத்தினால் குறித்த (14ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்பூசி குப்பிக்குள் இலையான்; சுகாதார அமைச்சுக்கு புதிய சிக்கல்

(கொழும்பு)

இரத்தினபுரி பொதுவைத்தியசாலையில் நேற்று தடுப்பூசிக் குப்பியிலிருந்து இலையான் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அகில இலங்கை சுகாதார சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் கடந்த சில தினங்களிற்கு முன் தடுப்பூசிக் குப்பிகள் இரண்டில் இருந்து கண்ணாடித் துண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டிருந்த நிலையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்நிலைமை சுகாதாரத்துறையில் (14ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு மீளக் குடியமர்ந்த மாணவர்கள் மீளவும் விண்ணப்பிக்க வேண்டும்

(திருகோணமலை)

வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து அண்மையில் யாழ். மாவட்டத்தில் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட மாணவர்களில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் பரீட்சைக்கு மீள விண்ணப்பிக்க வேண்டும் என வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

இதில் தொடர்பில் (14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களுக்கு ஆயுதங்களை வழங்கி போராட்டத்தை தீவிரப்படுத்துவோம்

## மாவோயிஸ்ட் தலைவர் அறிவிப்பு

(புதுடில்லி)

கம்பி வேலிக்குள் சிறைப்படுத்தப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களை இலங்கை அரசு விடுவிக்காவிட்டால் தமிழர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கி சுதந்திரப் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் என்று மாவோயிஸ்ட் நக்சலைட் இயக்கத்தலைவர் கணபதி அறிவித்துள்ளார்.

இதுபற்றி ஒரு இணையத்தளத்திற்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

உலகிலேயே மிகப் பெரிய இனப்படுகொலை இலங்கையில் நடந்துள்ளது. இலங்கை அரசு தமிழர்களை கம்பி வேலிக்குள் அடைத்து சித்திரவதை செய்வதை அறிந்து வேதனைப்படுகின்றோம்.

அவர்களுக்கு நாங்கள் நவீன ஆயுதங்கள் வழங்கி சுதந்திர போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். இதற்கான விடயங்களை நாங்கள் வகுத்து வருகிறோம். அண்டை நாட்டில் உள்ள தமிழர்கள் கொடூர சித்திரவதை செய்யப்படுவதை அனுமதிக்க மாட்டோம்.

அதிநவீன படகுகள் மூலம் கடல்வழியாக ஆயுதங்களை இலங்கைக்கு கொண்டு செல்வோம் (14ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(வேலணை)

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள யாழ்ற்ரன் கல்லூரியில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்படவுள்ளது. இப் பதவிக்கு தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர் தரத்தைச் சேர்ந்த பட்டதாரித் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிபுத் திகதி 15.11.2009 ஆகும். விண்ணப்பங்களைத் தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (சு)

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம்

(வேலணை)

தீவகக் கல்வி வலயத்தில் கிறிஸ்தவம், சித்திரம், சங்கீதம், ஆரம்பக் கல்வி (மூவர்) சமூகக் கல்வி ஆகிய பாடங்களுக்கு சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்கள் உள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவை தரம்1, 2-1 ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிபுத் திகதி 15.1 .2009 ஆகும்.

விண்ணப்பங்களை இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்கவேண்டும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச-3)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திட்டமிடல் பதவி வெற்றிடமாக உள்ளது. இப்பதவிக்கு தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் I அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 2-I சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிபுத் திகதி 30.10.2009 ஆகும். விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

## புங்குடுதீவுக்கு இரவு நேர பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து புங்குடுதீவுக்கு நேற்று முன்தினம் முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் இரவு நேர பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரவு 7.30 மணிக்கு புறப்படும் பஸ் அங்கு தரித்து நின்று மறுநாள் காலை குறிகட்டுவானிலிருந்து தனது சேவையை ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலர் நந்தகோபாலன், யாழ்.அரச அதிபரிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் மற்றும் கூலி தொழிலாளர்கள் நன்மையடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (சு)

## சிறுவர் தின விழா

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச-3)

# பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கு உலக வங்கி ரூ.200 மில். நிதியுதவி

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் உலக வங்கி நெல்சிப் திட்டத்திற்காக 200 மில்லியன் ரூபாய் நிதி உதவியை வழங்கவுள்ளது.

இத் தகவலை யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பிரதேச சபைகளின் ஊடாக நெல்சிப் (NELSIP) திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத் திட்டத்திற்கென ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் உலக வங்கி 200 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கமைய யாழ்.மாவட்டத்திலுள்ள 13 பிரதேச சபைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேச சபைகளும் எதிர்வரும் 4 வருடங்களுக்கு தமது பிரிவில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கலாம்.

இதற்காக யாழ்.மாவட்டத்தில் ஆரம்ப ஆய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இத் திட்டம் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி ஆணையாளர்கள், உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் உட்பட பிரதேச சபை உத்தியோகத்தர்கள் பங்குபற்றவுள்ளனர் என யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் குறிப்பிட்டார். (ச-5)

# மிருசுவில் நலன்புரி முகாமிலுள்ள மக்கள் தங்களை விடுதலை செய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து கடந்த மாதம் நடுப்பகுதியில் அழைத்துவரப்பட்டு மிருசுவில் நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் இதுவரையும் விடுவிக்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு 336 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 11 பேர் உள்ளதாக முகாம் தகவல்கள் தெரிவித்தன.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியைச் சேர்ந்த அவர்கள் கடந்த மாதம் நடுப்பகுதியில் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து அழைத்துவரப்பட்டு மிருசுவில் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கர்ப்பிணித் தாய்மார், வயோதிபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் உள்ளனர்.

தாம் மருதங்கேணிப் பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் தம்மை யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்கள் பொறுப்பேற்க தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமக்குப் பின்னர் வவுனியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட அனைவரும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் தாம் ஒன்றரை மாதம் கடந்த நிலையிலும் விடுவிக்கப்படவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதை விட முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் தம்மை வந்து நலன் விசாரித்துவிட்டு செல்வதாகவும் அவர்கள் கூறினார்.

தம்மைச் சந்தித்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் தம்மை விடுவிப்பதாக கூறிய போதும் இதுவரையும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் கூறினார்கள்.

இவர்களுடன் வந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களை துணைவேந்தர் பொறுப்பெடுத்து அழைத்துச் சென்றதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-5)

# சலுகை விலையில் அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் திட்டம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் செலவீனத்தைக் குறைக்கும் ஜனாதிபதி மஹிந்த சிந்தனையின் திட்டத்திற்கு அமைய அரசாங்க ஊழியர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை வழங்கும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவரது அமைச்சில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்க ஊழியர்களுக்கு சலுகை விலைக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கவும் அதற்கான கடன் வசதிகளையும் செய்து கொடுக்கவும் விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ரீ.வி.எஸ். மோட்டார் சைக்கிள் நிறுவனத்தின் 6 வகையான தயாரிப்புகள் இவ்வாறு சலுகை விலைக்கு வழங்கப்படுகின்றன. அதன்படி தற்போது சந்தையில் நிலவும் விலையை விட 10 ஆயிரம் ரூபா குறைவாக அறவிடப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சத்து நான்காயிரம் ரூபா பெறுமதியான விலை வரையிலான மோட்டார் சைக்கிள்களை மூன்று முதல் ஐந்து வருடம் வரையிலான காலத்துக்கு தவணை அடிப்படையில் செலுத்தக்கூடிய வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு கடனுதவி வழங்க இலங்கை வங்கி முன்வந்துள்ளது. மாதத்துக்கு 07.9 வீதம் எனவும் வருடத்திற்கு 9.5 வீதம் எனவும் குறைந்த அளவில் வட்டி அறவிடப்படவுள்ளது.

வாகனத்துக்கான காப்புறுதியை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கடன் அடிப்படையிலேயே வழங்குகிறது. மேலும் காப்புறுதிக் கட்டணத்தையும் 25 முதல் 30 வீதம் வரை குறைத்தே நிர்ணயித்துள்ளது.

வாகனத்துக்கு ரீ.வி.எஸ். நிறுவனம் 3 வருட உத்தரவாதம் தருவதுடன் உதிரிப்பாகங்களையும் 10 வீத கழிவு விலைக்கே வழங்குகிறது. விற்பனைக்கு பின்னரான சேவையை நாடெங்கிலுமுள்ள 500 நிலையங்கள் மூலம் மேற்கொள்ள உள்ளது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனம், ரீ.வி.எஸ். நிறுவனம், இலங்கை வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியன ஒருங்கிணைந்து இத்திட்டத்தை மேற்கொள்வதுடன் இதற்கான உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## வயல் கிணற்றிலிருந்து வயோதிபர் சடலமாக மீட்பு

வயல் கிணற்றிலிருந்து வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை சுன்னாகப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் உடுவில் வீதி சுன்னாகத்தை சேர்ந்த அ.தர்மரட்ணம் (வயது-83) என்பவராவார். குறித்த வயோதிபர் அன்று மாலை காணாத நிலையில் அவரை உறவினர்கள் தேடியபோது வயல் கிணற்றிலிருந்து அவர் சடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-3)


**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.

K.K.S. றோட், இல. 6, கனகசபைலேன்,
வண்ணார்பண்ணை, சிவலிங்கப்புளியடி.
T.P.:021 222 8680 (C-3524)

**பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம்**

யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் மேற்படி பொதுக்கூட்டம் 04.11.2009 அன்று புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடை பெறும். இக்கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
இப் பொதுக்கூட்டம் 05.08.2009 அன்று தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர்
பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

(C-3587)

**PERSONAL CLASS**


364, Stanly Rd, Jaffna
(Near-DMI)

தமிழ் - K.தர்மராஜா
Eco.- N.தயாபரன்
Hin. Cul.- S.சிறி
Pol. Sci. - Mr.புவனதாஸ்
Drama - S.சிவன்சுதன்

BA.-Part I Revision & Paper
ENGLISH
By.R. MAHESWARAN (Dip-in-Eng)
Sat/ Sun 9-10/1.15-3.00
ஆரம்பம் 24.10.2009 சனி 9 மணி.
(3824)

**ஆசிரியர்கள் தேவை**

யாழ்ப்பாண எல்லைக்குள் புதிதாக ஆரம்பிக்கும் கல்வி நிறுவனத்திற்கு BA, B.Com கற்பிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை (அனைத்து பாடங்களும்)
தொடர்பு: 077 9235567
077 2230544
(3825)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளியின் ஆசிரிய தின விழாவில் நிலையத் தலைவர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் நிற்பதையும் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இந்திய அரசின் 500 கோடி நிதியுதவி மூலம் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள்

## அமைச்சர் யாப்பா தகவல்

(கொழும்பு)



இந்தியா வழங்கவுள்ள 500 கோடி இந்திய ரூபா மேலதிக நிதியுதவித் தொகை மூலம் வடக்கில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் இதனைக் கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இடம்பெயர்ந்த மக்களின் நலனுக்காக இந்திய அரசாங்கம் வழங்கவுள்ள 500 கோடி இந்திய ரூபாவை மேலதிகமாக வழங்க முன் வந்துள்ளது. மடு – தலை மன்னார் மற்றும் ஓமந்தை பளைக்கிடையிலான ரயில் பாதைகளை புனரமைத்தல், ரயில் பெட்டிகளை கொள்வனவு செய்தல், யாழ். துரையப்பா விளையாட்டரங்கை புனரமைத்தல் மற்றும் கலாசார நிலையம் அமைத்தல் போன்ற வேலைகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான திட்ட அறிக்கை விரைவில் இந்தியாவுக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் இது குறித்து இரு நாடுகளுக்குமிடையில் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் நலன்கள் குறித்து ஆராய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்த தமிழக எம்.பி.க்கள் குழு சர்வதேச சமூகத்திற்கு தெளிவான செய்தியொன்றை முன்வைத்துள்ளது. தமிழக எம்.பிக்களின் இலங்கை விஜயத்தை அடுத்தே இந்த உதவி கிடைக்கவுள்ளது. இடம்பெயர்ந்த மக்களை துரிதமாக மீள்குடியேற்ற வேண்டுமென்பதே தமிழக எம்.பிக்களின் பிரதான கோரிக்கையாகும் என்றார். (ஓ-6)

# மட்டு. வர்த்தகர் ஒருவர் கொழும்பு செல்லும் வழியில் கடத்தல்

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து வியாபாரத்தின் நிமித்தம் கொழும்பு செல்லும் வழியில் வர்த்தகரொருவர் சீருடை தரித்தவர்களினால் வழிமறித்து கடத்தப்பட்டுள்ளதாக உறவினர்களினால் புகார் செய்யப்பட்டுள்ளது.

புதுநகரைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி நித்தியானந்தம் (வயது 50) என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பிலிருந்து லொறியொன்றில் கொழும்பிற்கு பழைய இரும்புப் பொருட்களை வியாபாரத்தின் நிமித்தம் உதவியாளருடன் இவர் கொண்டு சென்றதாகவும் ஹபறணைக்கும் மின்னேரியாவிற்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் பொலிஸ் சீருடை தரித்தவர்கள் உட்பட 4 பேர் லொறியை வழிமறித்து இவரை அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட நபர்கள் லொறிச் சாரதி மற்றும் உதவியாளரிடம் பொலிஸிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறியே இவரை அழைத்துச் சென்றதாகவும் அறிய முடிகின்றது.

சம்பவம் தொடர்பாக அவரது மனைவி உட்பட உறவினர்கள் தனது கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளதாக மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

இப்படி அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இந் நபர் தொடர்பாக 5 நாட்கள் கடந்து விட்ட நிலையிலும் தகவல்களை அறிய முடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இலங்கை-ரஷ்யா -நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கைக்கு தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்படும் என ரஷ்யா உறுதிமொழி வழங்கியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியில் மற்றும் பொருளாதார ரீதியாக இலங்கைக்கு தொடர்ச்சியான உதவிகளை வழங்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அலெசி பொரட்விக்கின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய பிரதிவெளிவிவகார அமைச்சர் தற்போது இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வெளிவிவகார அமைச்சில், அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம விற்கும், அலெசி பொரட்விக்கிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது நிலவி வரும் மரபு ரீதியான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையில் ரஷ்ய அதிக முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் எவ்வாறான துறைகளில் முதலீடு செய்ய முடியும் என்ற சாத்தியவள ஆய்வு ஒன்று நடத்தப்படவுள்ளதாகவும், பின்னர் முதலீடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் ரஷ்ய பிரதி வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# லிபியாவில் 2 ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிக்கும் பாரிய வீடமைப்புத்திட்டம்

## இலங்கை அரசு பொறியியல் கூட்டுத்தாபனம் வசம்

(கொழும்பு)

லிபியாவில் 2 ஆயிரத்து 500 வீடுகளைக் கொண்ட பாரிய வீடமைப்புத் திட்டம் ஒன்றின் நிர்மாணப் பணிகளை இலங்கை அரசாங்கப பொறியியல் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள உள்ளதாக நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான இந்த வீடமைப்புத் திட்டத்தின் மூலம் 2 ஆயிரம் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு வருடங்களில் இத்திட்டத்தைப் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனமொன்று வெளிநாட்டில் மேற்கொள்ளும் மிகப் பெரிய திட்டம் இது. இந்தத் திட்டம் ஜனாதிபதியின் முழு ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

டிசம்பர் மாதத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இரு வருடங்களில் மேற்படி வீடமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தால் 2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 7ஆயிரத்து 500 வீடுகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தமும் இலங்கைக்கு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். (ஓ-6)

# பௌத்த சாசன அமைச்சை மீளவும் உருவாக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் பிக்குகள் கோரிக்கை

(கொழும்பு)

பௌத்த சாசன அமைச்சை மீளவும் உருவாக்க வேண்டுமென மஹாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மல்வத்து அஸ்கிரி பீட பீடாதிபதிகள் உள்ளிட்ட மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனைப் போன்று பௌத்த சாசனத்தை பேணிப்பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும் என மஹாநாயக்கதேரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னர் காணப்பட்ட பௌத்த சாசன அமைச்சின் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பௌத்த சாசன அமைச்சை நிறுவுவதன் மூலம் பௌத்த மக்களின் சமய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வாய்ப்பு கிட்டும் என மாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஓ-6)

# கடனட்டை மோசடி தொடர்பில் 3 தமிழர்கள் பாங்கொக்கில் கைது

(கொழும்பு)

கடனட்டை மோசடி தொடர்பில் பாங்கொக்கில் மூன்று இலங்கையர்கள் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் சிவபிரியன் சிவாக்கிய ராஜா, அழகப்பன் பாலேந்திரன் மற்றும் வெங்கடேஸ்வரன் மகேஸ்வரன் என தெரிவிக்கப்படுகிறது.

பாங்கொக்கின் சுக்ஹம்விட் சோய் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இருந்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 104 இலத்திரனில் அட்டைகளும் காந்தபுலன் உணரி ஒன்றும் இரண்டு மடிக் கணனிகளும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து அவர்கள் தாய்லாந்தை தளமாக பயன்படுத்தி சர்வதேச கடனட்டை மோசடிகளை செய்யும் குழுவை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சர்வதேச வங்கி கணக்குகளை கொண்டிருக்கும் ஐரோப்பிய வாடிக்கையாளர்களின் கடனட்டை தகவல்களை பெற்று அவற்றை போலி கடனட்டைகளுக்கு பிரதி செய்து அவர்கள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)



திருநெல்வேலி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் யோகாசனக் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் போசகரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கணநமநாதன் உரையாற்றுவதையும் மற்றும் யோகிராஜன், எஸ்.லோகேஸ்வரன் ஆகியோர் பயிற்சி வழங்குவதையும், பயிற்சிபெறும் மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## களப்பயிற்சியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும் வீதிப்போக்குவரத்து சம்பந்தமான களப்பயிற்சியும் கருத்தரங்கும் நாளை வெள்ளிக்கழமை காலை 7.30 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவும் "அச்சு மத்திய தீபம்" மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அரங்கில் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) யோ.ரவீந்திரன், இளைப்பாறிய அதிபர் லயன் சி.யோகசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-9)




## 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

**அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலம்**

மு.பிருந்தாபன்-158, சி.தயாபரன் -156

**அச்சுவேலி கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை**

க.நிலக்சனா -142

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

பி.பவானிகா -171, ர.ரயின்தா-163, சி.அபிவர்ணா-161, கி.அபிராமி -155, தே.சிவ கௌரி -155, கே.கிருஷாயினி -150, சு. சயந்தவி-150, க.தர்சினி-148, ஜெ.துவாரகா-147, க.பிரியங்கா-147, ம.மதுஷா-143, ப.அபர்ணா1-143, ர.தனுஷா-141,

**காசிப்பிள்ளை இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயம், கல்வியங்காடு**

சி.சாகித்தியன்-146, சி.கம்சாயினி-141.

**கல்வியன்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

வ.நிதர்ஷன் -140, அ.நிக்ஷனா-140

**புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி**

அ.ஜொஸ்லின்யன்-174, ரா.சரண்யா-166, சி.சந்தியா-162, த.பிரசாந் -154, உ.சோபிகா-145, கு.டிலக்சன்-145, த.ஜோலின் நிவாசனா-145, பு.ஆகாஷ்-144, மோ-பயஸ்-142, கு.ஸ்ரீசன்-140

**நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை**

சௌ.தர்சிகா-155, சி.ஜனார்த்தன்-150, ர.அனுசாந்-141.

**புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி**

க.திவியா-156, பா.கஜானி-156, கி.ஜிசாகர்ன்-154, பா.விதுஷா-146, ஸ்ரீ.ரிஷானி-141. (ஓ)

## ஆமணக்கு எண்ணெய் உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் வலிமேற்கு பிரதேசத்தில் எண்ணெய் வித்து உற்பத்திகளை அதிகரித்தல் திட்டத்தினூடு சூரியகாந்தி, எள்ளு, தென்னை மற்றும் காட்டாமணக்கு போன்றவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது.

அதன்படி ஆமணக்கு விதை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கமைய தரிசுநிலங்களை விளைநிலங்களாக்கி இயற்கை வழி முறையில் ஆமணக்கு விதை உற்பத்தியினை மேற்கொள்ளும் முயற்சியில் ஆர்வமுடையவர்களை இனங்கண்டு இணைத்து இவ் உற்பத்தி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இவ் ஆமணக்கு உற்பத்தியில் இனங் காணப்பட்டவர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிமை காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. பயனாளிகளின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் இலவசமாக நல்லின வித்துக்களையும் வழங்குவதுடன் உற்பத்தி செய்யப்படும் வித்துக்களுக்கு விலை நிர்ணயம் செய்வதன் ஊடாக விதைகளை கொள்வனவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத் திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-17)

## பதவியுயர்வு

நாரந்தனை கணேச வித்தியாலயத்தின் சிரேஷ்ட வகுப்பு பழைய மாணவியான திருமதி சுகன்யா பாஸ்கரன் இம்மாதம் முதலாம் திகதி முதல் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதம பொறியியலாளராக பதவியுர்வு பெற்று பிராந்திய முகாமையாளர் (வடக்கு) கடமையினை பொறுப் பேற்கவுள்ளார். (ஓ-4)

## செயலமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த பரிகாரக் கற்பித்தல் செய லமர்வு (கணிதம்) ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை முதல் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வெளியீடான 'அருள் ஒளி' புரட்டாதி மாத இதழ் நவராத்திரி சிறப்பு மலராக வெளிவந்துள்ளது.

இவ் இதழில் நவராத்திரி மகத்துவம், ஸ்ரீதுர்க்கா பூஜை போன்ற கட்டுரைகள் அடங்கியுள்ளன. (ஓ-9)

## உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்ட கட்டுரை மற்றும் புத்தாக்க கண்காட்சி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்த்தில் பிரதேச செயலக ரீதியாக கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்கள் மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிக்காகத் தெரிவு செய்யப்படுவதுடன், வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள உலக விஞ்ஞான தினவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதில் கீழ்ப்பிரிவு தரம்6-8 வரை, மத்திய பிரிவு தரம் 9-11 வரை, மேற்பிரிவு தரம் 12-13 வரையாகும்.

போட்டியாளர்கள் அனைவரும் கீழ்வரும் தலைப்புகளில் ஏதாவதொன்றை தெரிவு செய்து தமது ஆக்கத்தினைச் சமர்ப்பிக்க முடியும்

- கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் விதாதா வள நிலையங்களின் பங்களிப்பு
- மானிட அபிவிருத்தியில் நவீன விஞ்ஞான தொழில்நுட்பவியலின் விளைவுகள்.

இவற்றில் கீழ்ப்பிரிவுக்கான கட்டுரைகள் 600- 1000 சொற்களும்,

மத்திய பிரிவிற்கான கட்டுரைகள் 1000-1500 சொற்களும் ,

மேற்பிரிவுக்கான கட்டுரைகள் 1500-2000 சொற்களும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆக்கம் சொந்த ஆக்கமாக இருத்தலுடன் இதற்கு முன்னர் வேறு எந்தப் போட்டிக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டதாகவோ அல்லது பிரசுரமாகியதாகவோ இருத்தலாகாது.

சமர்ப்பிக்கப்படும் ஆக்கம் விண்ணப்பதாரியின் சொந்த ஆக்கம் என்பதை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் சொந்தக் கையெழுத்தில் எழுதி விண்ணப்பப்படிவத்துடன் எதிர்வரும்26.10.2009 திங்கட்கிழமை அல்லது அதற்கு முன்னதாக கீழ்வரும் முகவரியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட மட்டத்தில் நவம்பர் மாதத்தில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள கண்காட்சி நிகழ்வில் பாடசாலை மாணவர்களது தொழில்நுட்பம் சார்ந்த புதிய ஆக்கங்களும் உள்ளடக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் யாவரும் பங்குபற்ற முடியும்.

ஆக்கம் மாணவர்களால் உருவாக்கப்பட்ட சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும்.

கண்டு பிடிப்பானது விஞ்ஞான தொழில்நுட்பவியல் சார்ந்ததாகவோ இலகு தொழில்நுட்பவியல் சார்ந்ததாகவோ அல்லது நவீன தொழில்நுட்பவியல் சார்ந்ததாகவோ இருத்தல் வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் நவம்பர்மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள கண்காட்சி நிகழ்வுக்கு முதல் நாள் ஆக்கங்கள் யாழ்.மத்திய கல்லூரியில் வைக்கப்படவேண்டியதுடன் நிகழ்வின்போது அவ் ஆக்கத்தை விபரிக்கக்கூடிய வகையில் மாணவர்கள் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்படவுள்ள ஆக்கங்கள் பற்றிய விபரங்கள் எதிர்வரும் 26ஆம்திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர், விதாதா வள நிலையம் - பிரதேச செயலகம், பருத்தித்துறை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (ஓ-6-19)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இவ் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை மாணவன் கி. ஜெனோஷன் 141 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அத்துடன் இப் பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் மேலும் 6 பேர் 100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலையில் ச.தனுப்பிரியன் 144 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளதுடன் 3 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். (ஓ-9)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேவி பாகவதம் தொடர் சொற்பொழிவு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் வழங்கவுள்ளார். (ஓ-35)

# விஜய நகரப் பேரரசு

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

32

அதனாற் சீற்றமடைந்த கிருஷ்ணதேவ ராயன் அவர்களுக்கு ஒரு நல்ல பாடங் கற்பிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் குல்பர்காவுக்கு சென்று அதனைத் தரை மட்ட மாக்கினான். மேலும் அவன் பிரோசாபாத், சாகர் ஆகிய கோட்டைகளையும் கைப்பற்றிக் கொண்டு தன்னுடைய படையைப் பிஜப்பூர் வரையில் நடத்திச் சென்று அந்த நகரத்திற் சிறிது காலந் தங்கி அதற்கு மிகுந்த சேதம் விளைத்து விட்டுத் திரும்பினார். குல்பர்காவில் சிறைப்பட்டிருந்த மாமூது பாமினியின் மக்களை விடுவித்து அவர்களுள் மூத்தவனை அரசனாக்கிவிட்டு மற்றவர்களை விஜயநகருக்கு அழைத்து வந்து அவர்களை மிகவும் அன்பாக நடத்தினான். இவ்வாறு பாமினி சுல்தானியத்துக்குப் புத்துயிரூட்டுவதற்காக இந்து அரசனான கிருஷ்ண தேவராயன் செய்த முயற்சி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. மேலும் பாமினி ராஜ்யத்தின் சிதைவுக்குப்பின் தோன்றியிருந்த ஐந்து முஸ்லிம் ராஜ்யங்களின் சுல்தான்களும் கிருஷ்ணதேவராயனுடைய முயற்சியை வெறுத்தார்கள். எனவே அவர்கள் விஜயநகரத்தின் மீது கொண்டிருந்த பகை மேலும் வளர்ந்தது. கிருஷ்ணதேவராயன் உயிரோடிருந்த போது தன்னுடைய ஆறு வயது மகனை அரசனாக்கித் தான் மந்திரிப் பதவியை வகித்தான் என்று நூனிஸ் எழுதி வைத்திருக்கிறார். கிருஷ்ணதேவராயன் தன் மகன் திருமலைராயனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டியதைத் தான் நூனிஸ் இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார் என்று நாம் கருதவேண்டும். அந்த நிகழ்ச்சி 1524 ஆம் ஆண்டில் நடைபெற்றிருக்கவேண்டும்; ஏனெனில் அந்த ஆண்டில் திருமலைராயனுடைய பெயரில் வெளியிடப் பெற்ற பொறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. முடிசூட்டு விழா எட்டுமாதம் நடந்ததென்றும் அந்தச் சமயத்தில் திருமலைராயன் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனான் என்றும் நூனிஸ் கூறுகிறார்.

திருமலைராயன் பெற்ற உயர்வால் முதலமைச்சன் சாளுவதிம்மனுடைய பதவியும் அதிகாரமும் தாழ்ந்துவிட்டதால் அவனுடைய மகன் இளவரசனுக்கு நஞ்சு வைத்து விட்டான் என்றும், அதனால்தான் இளவரசன் இறந்து போனான் என்றும் நூனிஸ் மேலும் கூறுகிறார். உண்மையை அறிந்த கிருஷ்ண தேவராயன் அமைச்சனைத் தன்னுடைய அவைக்கு வரச்சொல்லி அனைவர் முன்னிலையும் அவன் செய்த கோழைத்தனமான குற்றத்தை எடுத்துக்கூறி அவனையும் அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் சிறையில் அடைத்து விட்டான். அவனுடைய அவையிலிருந்த போர்த்துக்கீசியர் சிலர் அந்த வேளையில் அவனுக்கு உதவிசெய்தனர். திம்மனுடைய மக்களுள் ஒருவன் சிறையிலிருந்து தப்பியோடியபோது, அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கிவிட்டு, மீண்டும் அவனைச் சிறையில் தள்ளிவிட்டார்கள். அவனோடிருந்த மற்றக் கைதிகளுடைய கண்களும் பிடுங்கப்பட்டன.

அடில்ஷா இழந்த நாடுகளை மீட்பதற்காக மீண்டும் ஒரு முயற்சி செய்தான். ஆனால் கிருஷ்ணதேவராயன் தன் படைகளுடன் புறப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனே அவன் திரும்பியோடிவிட்டான். அதன்பின் கிருஷ்ண தேவராயன் பெலகாம் மீது படையெடுப்பதற்கு ஆயத்தஞ் செய்தான். அப்போது பெலகாம் அடில்ஷாவின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆனால், கிருஷ்ணதேவராயன் திடீரென நோய்வாய்ப்பட்டு விரைவில் இறந்து போனான் (1529). இறப்பதற்கு முன் அவன் தன் ஒன்றுவிட்ட தம்பி அச்சுதராயனைத் தனக்குப் பின் அரசனாக நியமித்தான்.

கிருஷ்ணதேவராயன் ஒப்புயர்வற்ற போர்த் திறமை பெற்றிருந்தது மட்டுமின்றி அரசியல் நயத்திறத்திலும் நிர்வாகத் திறமையிலும் மிக உயர்ந்த இடத்தை வகித்தான். அதுபோலவே கவின் கலைகளிலும் அவன் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்ததால் அவற்றிற்கு பேராதரவு தந்தான். வெளிநாட்டிலிருந்து வந்த பலர் விஜயநகரத்தின் பேரழகையும் கம்பீரமான தோற்றத்தையும் கண்டு உள்ளக் கிளர்ச்சி பலவாறு புகழ்ந்து வியந்து பாராட்டினார்கள். அந்த நகரத்தின் செல்வச் செழிப்பையும், அதனுடைய போர் வலிமையையும், அங்கு நடைபெற்ற விழாக்களையும், அதற்கரசானாயிருந்த கிருஷ்ண தேவராயனுடைய வீரத்தையும் அவர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய வர்ணனைகளைப் படிப்பது உள்ளத்தில் மிகுந்த எழுச்சியைத் தருகின்றது. தென்னிந்தியா முழுவதும் கிருஷ்ண தேவராயனுடைய ஆட்சியில் இருந்தது. பங்காப்பூர், கெர்சப்பா, பட்கல் முதலிய இடங்களில் ஓரளவு சுதந்திரமாக ஆட்சிசெய்து வந்த சிற்றரசர்கள் அவனுடைய மேலதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

பேரரசு அவனுடைய நேர்ஆட்சியில் இருந்தபோதிலும், அதனுடைய பலவேறு மாகாணங்களிலும் ஆளுநர்களாய்ப் பணியாற்றிய தளபதிகள் நடைமுறையில் ஏறக்குறையச் சுயேச்சையாகவே தங்களுடைய ஆட்சியை நடத்திவந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள காலாட் படையினர், குதிரைப் படையினர், யானைப் படையினர் ஆகியவைகளைக் கொண்ட ஒரு படைப் பிரிவை எந்த நேரத்திலும் ஆயத்த நிலையில் வைத்திருக்கவேண்டும். அன்றியும் அவர்கள் மையக் கருவூலத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகையை ஒழுங்காகச் செலுத்த வேண்டும். அவ்விரு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அவர்கள் நடந்துகொண்ட வரையில் மைய அரசு அவர்கள் அதிகாரத்தில் தலையிடாது.

அத்தகையதோர் ஆட்சிமுறை திறமையாக நடைபெற வேண்டுமானால், மன்னவன் மக்கள் அனைவருடைய மதிப்பையும் பெறுகிற வகையில் நடந்துகொள்ள வேண்டும். அயராத உழைப்பாற்றலும் சாமர்த்தியமும் உடையவனாயிருப்பதோடு தன் கடமைகளை ஆற்றுவதில் மிகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். கிருஷ்ணதேவராயன் அந்த இயல்புகள் எல்லாவற்றையும் உடையவனாயிருந்தான். அதனால் அவனுடைய ஆட்சிக் காலத்தில் அவனுடைய பரந்த ராஜ்யத்தின் எந்தப் பகுதியிலும் குழப்பமோ அமைதிக்குலைவோ ஏற்படஇல்லை. அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன். அவனே ஒரு கவிஞன். 'ஆமுக்த மால்யதா' என்னும் கவிதை நூல் அவன் எழுதிய ஒன்று என்று சொல்லப்படுகிறது. அரசன் கடைப்பிடித்த ஆட்சிமுறையின் அடிப்படைக் கொள்கைகளின் விளக்கமும் அந்த நூலில் ஏனைய செய்திகளோடு இடம்பெறுகிறது. புகழ்மிக்க தெலுங்குக் கவிஞர் அல்லசானி பெத்தனா அரசவைக் கவிஞராக இருந்து கிருஷ்ண தேவராயனுடைய அவைக்கு அணிசெய்தார். தகுதியறிந்து பரிசில்வழங்கும் அவனுடைய வள்ளன்மை நாடு முழுதுமிருந்த தலை சிறந்த புலவர் பலரை அவனுடைய அவைக்கு ஈர்த்து அதனால் அவனுடைய புகழ் மேலும் மேலும் ஓங்கியது. அவனுடைய சமயப் பற்றும், மதக் காழ்ப்பின்மையும் ஏனைய துறைகளின் அவன் அடைந்த புகழுக்கு ஒத்த புகழை அவனுக்கு அளித்தன. (தொடரும்)

பேராசிரியர்
**க.அ.நீலகண்டசாஸ்திரிகள்**

# கலைத்திட்டத்தில் நாட்டுப்புறவியலை ஒரு பாடமாக்குவோம்

06

கலாபூஷணம்
**செ.மெற்றாஸ்மயில்**



இசைக் கலைஞர்கள், நாட்டிய நடிகைகள், நாடக நடிகர்கள், நாதஸ்வர தவில் கலைஞர்கள் ஆகியோருக்கு கோயில் படித் தரங்களும், மானியங்களும் நிரந்தரமாக வழங்கப் பெற்றன.

இக்கோயில் கலைஞர்கள் எல்லோருமே இறைவனுக்கு கலைமூலம் தொண்டு செய்வதற்கென்றே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் என்று சொல்வதுதான் வழக்கம்.

அதிலும் குறிப்பாக, ஆடற்கலைக்கென்று தேர்ந்தெடுக்கப்பெறும் அழகும், இளமையும், ஆடற்கலைத் தேர்ச்சியும் உள்ள நங்கையர்களை கோயில் தாசியென்று சிறப்புக்குரியவர்களாகத் தேர்ந்தெடுத்து, அவர்களின் அழகு, இளமை, கலைத்திறம் அனைத்தையும் ஆண்டவனுக்கே அர்ப்பணம் செய்துவிட்டவர்கள் என்பதற்கு அடையாளமாக அவர்களை இறைவனுக்கே உரிமையாக்கி, அதாவது மனைவியாக்கி பொட்டுக் கட்டுதல் எனும் ஒரு சடங்கை நடத்தினர். அதாவது இறைவனுக்கும், அவர்களுக்கும் திருமணம் செய்து வைத்து ஆயுள்முழுவதும் அவள் தெய்வத் தொண்டுக்கே தாரைவார்த்துக் கொடுக்கப்படுவாள்.

இவ்வாறான நல்லநோக்கில் கலையை கோயில்கள் மூலம் வளர்த்தெடுக்க முயற்சி செய்யப்பட்டன. ஆனால் நாளடைவில் நோக்கம் நிறைவேறவில்லை. அதுபற்றி கிருஸ்ண மூர்த்தி கூறுகின்றார்.

"நாளடைவில் இதற்கென்று தாசி குலமென்று ஒரு ஜாதியையே உண்டாக்கி விட்ட கொடுமையையும் இத் தமிழகம் கண்டது. ....... இறைவனின் திருச்சந்நிதிக்கு முன்பு ஆத்மார்த்தமாக தனது இதயத்தையே நிவேதனம் செய்யும் புனிதப் பணிக்கென்று தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட அப் புனிதவதிகளை, அக்காலக் கோயிற் பூனைகளாகவும் பெருச்சாளிகளாகவும் இருந்த மடாதிபதிகள் முதல் அர்ச்சகர்கள், அறங்காவலர்கள், ஆள் பலமும், பணபலமும் உள்ள அந்தஸ்து மிக்க செல்வச் சீமான்கள் ஆகியோர் தங்களின் போகப் பொருளாகவும் ஆசைநாயகியாகவும் ஆக்கிக்கொண்ட அநீதியை என்னவென்று சொல்வது தெய்வத்திற்கு நிவேதனம் செய்த திவ்ய பிரசாதத்தை தெருநாய்கள் பறித்துக்கொண்ட செயலுக்குத்தான் இவற்றை ஒப்பிட முடியும். தேவரடியார்கள், தேவதாசிகள் என்னும் பெருமைக்குரிய பெயரும் தெய்வீகக் கலையும் இத்தகைய இழிவுக்கும் சீரழிவுக்கும் தாழ்ந்துவிட்டதை நினைத்து வருத்தாமல் இருக்க முடியவில்லை.

ஒரு ஜாதிக்கே உரியதாக இருந்த கலை இன்று உயர் வட்டாரங்களிலெல்லாம் விரும்பிப் போற்றிப் பயிலும் கலையாகப் பரவலாக வளர்க்கப்படுவதைக் காண்கின்றோம் என கிருஸ்ணமூர்த்தி கூறுகின்றார்.

எனவே கால மாற்றத்திற்கேற்ப, சமுதாய வளர்ச்சிக்கேற்ப யதார்த்த கருத்துக்கள் ஏற்புடையதாக, உளமாற்றங்கள் ஏற்பட்டு உண்மைகள் வெளிப்படுகின்றன. அந்த வகையில் தெய்வீகக் கலையான பரதநாட்டியம் சிலப்பதிகார காலத்தில் செழுமை பெற்று உலகம் போற்றும் கலையாக இருந்தது. அதனால் தமிழகத்தில் களப்பிரர், பல்லவர், சாளுக்கியர், ஆந்திரர், மராத்தியர், மொகலாயர், போர்த்துக்கீசர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆசியப் படையெடுப்புக்களும், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதப் படையெடுப்புக்களும், சமஸ்கிருதம், பாளி, தெலுங்கு, கன்னடம், மராத்தி, உருது, ஆங்கிலம் ஆகிய பிறமொழி ஊடுருவல்களுக்கும் தமிழர்களின் கலை இலக்கிய கலாசாரம் சிதைவுறக் காரணமாயின. ஆனால் படிப்படியாக மக்களிடம் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியாலும் மனிதநேய உணர்வுகளாலும் உளமாற்றங்களினாலும் கலைகள் அழியாது பாதுகாக்கப்பட்டுவிட்டன.


தமிழகத்தில் நடன கலாசேத்திரத்தை ஆரம்பித்த ருக்மணி தனது பேட்டியில் முதன்முதல் இரண்டு மாணவர்கள் மட்டுமே படிக்க வந்ததாகக் கூறினார். பரதநாட்டியத்தைக் கற்பது இழிவாகக் கருதப்பட்ட காலத்தைக் கடந்து இன்று ருக்மணி ஆரம்பித்து வைத்த நடன கலா சேத் திரத்தில் பிரவேசம் பெறுதல் மிகவும் கஸ்டமாகவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளை நாம் பார்க்கும் போது பின்வரும்உண்மைகள் புலப்படுகின்றன.

பரதநாட்டியம் போன்ற கலைகள் கோயிலில் ஆடப்பட்டத்தினாலும், தேவசதாசிகளினால் ஆடப்பட்டத்தினாலும், அதைப் பயில பின்னின்ற மாணவர்கள், இன்று தமிழகத்தில் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டதினாலும், மண்டபங்களில் அரங்கேற்றம் செய்து கௌரவிக்கப்பட்டதினாலும் குடும்ப கௌரவமாக ஏற்றும் பலரும் பயின்றதினால் தமிழகம் பரத நாட்டியத்திற்கு பெயர் போன அறிவாளிகளையும், நாட்டியக்கலை மாணிகளையும் கொண்டு விளங்குகின்றது.

கலை என்பது மன நிறைவைத் தரும் சாதனம். பேராசிரியர் கா.சிவத்தம்பி "நாடகம் என்னும் கலை" என்ற கட்டுரையில் பின் வருமாறு கூறுகின்றார். "கலை என்பது அதனைப் பயில்வோருக்கும் நுகர்வோருக்கும் மன நிறை வைத் தருகின்ற ஒரு திறன் ஆகும். இந்த மன நிறைவு அக்கலை வடிவை நுகர்வோரிடத்தே ஏற்படுத்தும் கற்பனைப் பிரிவு, அழகியல் திருப்தியுணர்வு ஆகியவற்றிலே காணப்படும்.

எனவே இக் கலையானது மனிதனைச் செம்மைப்படுத்துவது என்று கூறமுடியும். இக் கலைகளில் பாமரர் போற்றும் கலை வடிவங்கள் தெய்வீகக்கலைகளாக் மிளிர்கிறது. ஆனால் இன்று செந்நெறிக் கலைகளாக வகைப்படுத்திக் கொண்ட பரதநாட்டியமும் கர்நாடகசங்கீதமும் பாரம்பரிய கலைகள் என்ற பெயரோடு உயர்வு நிலையில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தனித் துறையாக விளங்குகின்றன. (தொடரும்)



வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட வடமாகாண தமிழ் இலக்கிய விழாவில் 2008 ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் உயர்கல்வித் துறையில் "சமூகவியல் கோட்பாட்டு மூலகங்கள் அமைப்பும் இயங்கியலும்" எனும் நூலுக்கான விருதை பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் கவிதை துறையில் "மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்" எனும் நூலுக்கான விருதை துவாரகனும் சிறுகதை துறையில் "ஓர் எழுதுவினைஞனின் டயறி " எனும் நூலுக்கான விருதை த.ஆனந்தமயிலும் பெற்றுக்கொள்வதைப் படங்களில் காணலாம்.

# நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் புதிய பாடசாலை மேம்பாட்டு திட்டம் அமுல்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளில் புதிதாக பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அவுஸ்திரேலியா முதல் அமெரிக்கா வரையான பல நாடுகளில் வெவ்வேறு பெயர்களுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையில் 2005 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு வலயம் தேர்ந்தெடுக்கப்பட்டு பரீட்சார்த்தமாக இப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்போது வட-கிழக்கு மாகாணம் இணைந்திருந்த படியினால் ஒரேயொரு வலயமான வவுனியா தேர்ந்தெடுக்கப்பட்டு அமுல்செய்யப்பட்டது.

2007 இல் வடக்கு, கிழக்கு இருவேறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதனால் கிழக்கில் சம்மாந்துறை வலயமும், வடக்கில் மன்னார் வலயமும் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிமுகமானது.

2008 இல் அக்கரைப்பற்று வலயமும் பட்டிருப்பு வலயமும் இவ்வருடம் கந்தளாய் வலயமும் தேர்வாகி இத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

2012 இல் இலங்கையில் சகல வலயங்களிலும் இத் திட்டம் அமுலுக்கு வந்துவிடுமென கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். இப் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட மானது வளங்களை ஒதுக்குதல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அதிகாரங்களை வழங்குதலுடன் தொடர்புடையது.

இந்த அதிகாரப் பகிர்வு மூலம் பாடசாலை முகாமைத்துவத்தில் முறையான மாற்றங்களை ஏற்படுத்தி பாடசாலையை மேம்படுத்த முடியுமென எதிர்பாக்கப்படுகிறது. இலங்கையில் தற்போது 35 வலயங்களில் இது அமுலில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ்இரு வகையான குழுக்கள் உருவாக்கப்படடுள்ளன. அவை பாடசாலை அபிவிருத்திக்குழு, பாடசாலை முகாமைத்து அணி என்பனவாகும்.

தற்போதுள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இன்னும் ஓரிரு வருடங்களில் வலுவிழக்க அந்த இடத்தை புதிய பா.அ.குழு நிரப்பும் என்று கூறப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர் எண்ணிக்கையைப் பொறுத்து இக்குழுவின் அங்கத்துவத் தொகை கணிப்பிடப்படும். எனினும், பொதுவாக 10-14 க்கிடையில் தொகை மட்டுப்படுத்தப்படும்.

அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர், அலுவலக பிரதிநிதி ஆகியோர் இதில் இடம்பெறுவர்.

தற்போதுள்ள நலன் விரும்பி உறுப்பினர் இப்புதிய குழுவில் இடம்பெறமாட்டார்.

குறிப்பாக், இக்குழு தீர்மானங்களையும் திட்டங்களையும் தீர்மானிக்க பின்னேயுள்ள பா.மு. அணி அவற்றை நடைமுறைப்படுத்தும் அணியாகச் செயற்படும். (ஓ-6)

# செய்திகளை திரிவுபடுத்தி வெளியிடும் இணையத்தளங்களை தடைசெய்ய தீர்மானம்

(கொழும்பு)

பொறுப்பற்ற வகையில் செய்திகளை வெளியீடு செய்யும் இணையத்தளங்களை கறுப்புப் பட்டியல் இட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் ஏனைய தரப்பினருக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தக் கூடிய வகையில் செய்திகளை திரிவுபடுத்தி வெளியிடும் இணையத் தளங்களை தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செயற்படும் இணையத் தளங்களின் பட்டியல் ஒன்று விரைவில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஊடகச் சட்டத்தின் மூலம் இந்தக் கட்டுப்பாட்டுகள் விதிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எனவே, எதிர்காலத்தில் பொறுப்பற்ற வகையில் செய்திகளை வெளியிடும் சகல இணையத்தளங்களும் முடக்கப்படும் என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஓ-6)

# சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

இந்தோனேஷியாவிலும் கனடாவிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பாக இன்ரபோல் எனப்படும் சர்வதேசப் பொலிஸாருடன் இணைந்து விசாரணை நடத்த கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பான தகவல்களை சர்வேதச பொலிஸாரினூடாகப் பெறவுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் 'சட்டவிரோத குடியேற்றவாசிகளைத் தடுக்கும் பிரிவு' தெரிவித்தது.

இதேவேளை மேற்படி தடுத்துவைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கு, சர்வதேச ரீதியிலான சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுடன் தொடர்பு இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, சட்டவிரோதக் குடியேற்றத்துக்காக முயற்சித்த 264 பேர் இந்தோனேஷியாவிலும் 76 பேர் கனடாவிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தோனேஷியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர் மத்தியில் சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபடும் பிரபலமானவர் ஒருவர் இருப்பதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. அந்த வகையில் கப்டன் ப்ராம் என அழைக்கப்படும் ஏப்ரகாம்லோஹெனாஸ் பெஸி என்பவர் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுடன் படகில் இருப்பதாக அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஸ்டீபன் ஸிமித் தெரிவித்துள்ளார்.

இவர் முன்னர் சட்டவிரோத ஆட்கடத்தலுக்காக இந்தோனேஷியாவில் தண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பில் இராஜதந்திர முனைப்புகள் இடம்பெறுகின்றன. எவ்வாறாயினும் அவர் சட்டவிரோத குடியேறிகளா அல்லது அரசியல் தஞ்சம் கோருபவர்களா என்பதை உறுதிப்படுத்த குடிவரவு திணைக்களத்தின் தெளிவுபடுத்தல் தேவை என இந்தோனேசிய வெளியுறவுத்துறை அமைச்சு குறிப்பிட்டதை அடுத்து அவர்கள் தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஓ-6)

# தமிழ்மொழி மூல பாடசாலைகளில் 'கடேற்' மாணவர் படையணிகளை ஆரம்பிக்க கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் "கடேற்" மாணவப் படையணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.யூ. விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அரச பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான மனோ நிலைமையினை மாணவர்கள் மத்தியில் உண்டுபண்ணும் நோக்கத்துடன் மாணவ படையணிகள் அமைக்கப்படவுள்ளன.

தமிழ்மொழி மூல பாடசாலைகளில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தற்போது செயலிழந்து காணப்படும் "கடேற்" மாணவ படையணிகளை புனரமைப்பதுடன் புதிதாக ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு வசதியாக ஆசிரியர்களை தகுதிகாண் உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இணைத்துக்கொள்ளப்படும் ஆசிரியர்களுக்கு இம் மாதம் முதல் ரந்தம்பே தேசிய சிறப்பணி பயிற்சி நிலையத்தில் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பொருத்தமான ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் வலய மட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

அருள்மிகு
நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய கந்த சஷ்டி 5ம் நாள் உற்சவ கால

தவில் நாதஸ்வர மங்கலம்

23.10.2009 ஐப்பசி வெள்ளிக்கிழமை நண்பகல் 01.00 மணி தொடக்கம் 03.30 மணிவரை ஆலய மணிமண்டபத்திலும் 3.30 தொடக்கம் 06.00 மணிவரை வசந்த மண்டபப் பூசை, எம் பெருமான் உள்வீதி உலாவின் போதும் இடம்பெறும்.

| தவிலிசை வித்துவான்கள் | நாதஸ்வர இசை வித்துவான்கள் |
|---|---|
| ந. நந்தன் | L.S. ஜெயநாதன் |
| M.S. குட்டி | K. நாகதீபன் |
| M.S. தெட்சணா | N. கோபன் |

தவில் நாத மங்களம் காண அனைவரையும் அழைக்கின்றோம்.

பரிபால சபையினர்,
உபயகாரர்.

(C-3586)

# ஐ.நா.வின் பிரதிநிதி ராதிகா குமாரசாமி அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்

(கொழும்பு)

யுத்த மோதல்களுடன் சம்பந்தப்பட்ட சிறு வர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை யின் பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த நிலையில் தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் சிறுவர்கள் குறித்து ஆராயும் நோக்கில் அவரது விஜயம் அமையவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

ராதிகா குமாரசுவாமி அடுத்த மாதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்யக் கூடும் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை படைகளில் இணைக்கும் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்காக இலங்கை அரசாங்கம் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது எனவும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்த விடயத் தில் இலங்கை முன்னிலையில் இருக்கிறது என்பதை ராதிகா குமாரசுவாமி ஊடக உலகத் திற்கு எடுத்துரைக்க முடியும் எனவும் அமை ச்சர் ரோஹக்கித்த போகொல்லாகம குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# இன்று ஒரு தகவல்

## அரசரின் விசித்திரச் செயல்

ஒரு நாட்டின் ராஜா ஒரு நாள் மாறுவேடம் புனைந்து நகர்வலம் வந்து கொண்டிருந்தார். இரவு நேரத்தில் ஒரு குதிரை மீது ஏறி நகரைச் சுற்றிப் பார்த்தபடியே வந்தார்.

நகரத்திற்கு வெளியில் ஒரு புளிய மரத்தடியில் ஒருவன் பரிதாபமாக உட்கார்ந்திருந்தான்.

அந்தப்பக்கமாக வந்த ராஜா அவனைப் பார்த்து ஏனப்பா இந்த நேரத்தில் ஏன் இங்கு உட்கார்ந்திருக்கின்றாய் என்று விசாரித்தார்.

ஐயா! நான் ஊருக்குள் போக வேண்டும் என்னைக் கொஞ்சம் உங்கள் குதிரை மீது ஏற்றிக் கொண்டு ஊருக்குள் கொண்டு போய் விட்டீர்களானால் மிகவும் உதவியாக இருக்கும் என்றார். சரி ஏறிக்கொள் என்றார் அரசர்.

அவ்வளவு தான்... அவன் குதிரையை அடித்து விரட்டி ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.

ராஜா ஏமார்ந்து போய் விட்டார். அவருக்கு மிகவும் அவமானமாக இருந்தது. இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் பேசாமல் அரண்மனைக்குத் திரும்பி விட்டார். இதை அவர் யாரிடமும் சொல்லவே இல்லை.

சில நாட்களுக்குப் பின் ஒருநாள் அரண்மனையில் வழக்கு விசாரணைகள் நடந்து கொண்டிருந்தன. ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்து தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார். சேவகர்கள் திடீரென ஒரு ஆளைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"மன்னா இவன் பல இடங் களில் கொள்ளையடித்திருக்கிறான். நேற்றிரவு ஒரு வீட்டில் திருட முயன்ற போது நமது காவலாளிகள் இவனைப் பிடித்து விட்டார்கள்" என்றனர்.

ராஜா அத்திருடனைப் பார்த்ததும் அன்று தன்னை ஏமாற்றியவன் தான் அவன் என்பதைப் புரிந்து கொண்டார். ஆனால் அவனால் இவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் அன்றைக்கு ராஜா மாறுவேடத்தில் அல்லவா இருந்தார்.

"நாளை தீர்ப்பு வழங்கப்படும்" என்று கூறி சபையைக் கலைத்தார் ராஜா. அந்த ஆளைக் கொண்டு போய் சிறையிலடைத்தார்கள்.

அன்றைய தினம் எல்லோரும் தூங்கிய பின் நள்ளிரவில் ராஜா சிறைக்கூடத்துக்குச் சென்று அந்த ஆளைப் பார்த்தார். "என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா?" என்றார். என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? "நீங்கள் மகா ராஜா இல்லையா?" என்றான் அவன்.

"அது இல்லை... இதற்கு முன் என்னை எங்கேயாவது பார்த்திருக்கிறாயா?" என்றார் அரசர்.

"இல்லையே" என்றான் அவன்.

ராஜா அலங்காரத்தை கலைத்தார். உடனே அவனுக்கு நினைவு வந்து விட்டது. அரசே உங்களிடமிருந்தா அன்றைக்குக் குதிரையைக் கடத்திக் கொண்டு போனேன்? என்னை மன்னித்து விடுங்கள் என்று சொல்லி அவரது காலில் விழுந்தான்.

இதோ பார் எழுந்திரு ... நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நாளைக்கு நான் நீ திருட முயன்ற வழக்கிற்காக தண்டனை கொடுக்கப் போகிறேன்.

அன்றைக்கு நீ என்னை ஏமாற்றியதற்கு அல்ல. அது மட்டுமல்ல நான் உன்னிடம் ஏமார்ந்த விடயத்தை யாரிடமும் சொல்லி விடாதே! இது நமக்குள்ளேயே இருக்கட்டும் என்று கூறினார்.

இந்தக் கதையை நண்பர் ஒருவர் என்னிடம் கூறிவிட்டு "அந்த ராஜா ஏன் அப்படி கூறினார்?" என்று கேட்டார்.

நான் சிறிது நேரம் யோசித்து விட்டு ராஜாவே திருடனிடம் ஏமார்ந்து விட்டார் என்றால் அது மிகவும் கேவலமில்லையா? அதனால்தான் அப்படி சொல்லியிருப்பார் என்றேன்.

நண்பர் புன்சிரிப்புடன் எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அது காரணமில்லை என்றார். அவர் கூறிய காரணம். அதாவது விஷயம் என்ன வென்றால் அந்த நிகழ்ச்சி வெளியில் எல்லோருக்கும் தெரிந்து போய்விட்டால்... கஷ்டப்படுபவர்களுக்கு கை கொடுத்துதவ எல்லோரும் தயங்க ஆரம்பித்து விடுவார்கள். அதன் பின் நாட்டில் தர்மம் கெட்டுவிடும். அப்படி ஒருநிலை தன் நாட்டிற்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் ராஜா அவ்விதம் செய்தார் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிகள நிலையத்தினால் 2010 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு யூலை மாதம் நடத்தப்பட்ட வணிகக்கல்வி, கணித, விஞ்ஞானப் பாட பரீட்சைகளில் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் 25 மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கணிதப்பிரிவு**

எஸ். பரி. பிரணவன் (ஹாட்லி கல்லூரி), எஸ். சுமங்கலி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். யசோதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஐ. சிறிசியாமளன், என். திருத்தணிகன், வி. ஜெயபிரசான், என். விருந்தவன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். வசந் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

எஸ். சசிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), ஏ. றஜீபவன் (ஹாட்லி கல்லூரி), ஏ.லஜீரன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். ஹரிகாலன் (ஹாட்லி கல்லூரி), ஏ.வி. அனற் நிசாந்தா (வேம்படி மகளிர் கல்லூரி), கே. சிறிகுமார் (ஹாட்லி கல்லூரி), என். நிலூசியா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி).

எஸ். சிந்துஜா (நெல்லி யடி ம.ம.வி), ஆர். செல்வபவிதா, என். பவீந்திரன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), பி. ஜெனோர்த் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி. டர்சன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கே. பிந்துஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி. திருவரன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். அருளினி (நெல்லியடி ம.ம.வி), எம். ரேகதீபன் (ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி), எஸ். சுலக்ஸனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

**விஞ்ஞானப்பிரிவு**

ஏ. நிதர்சன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ். கஜானனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி. கோகுலன் (ஹாட்லி கல்லூரி), எஸ். டினேஸ்சாந் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ். விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி. அரவிந்தன் (நெல்லியடி ம.ம.வி), கே. நிருஜன் (யாழ். இந்துக் கல்லூரி).

ஏ. பகீரதி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ். விதுரன் (ஹாட்லி கல்லூரி), ஏ. சுபாங்கி (வேம்படி மகளிர் கல்லூரி),ரி. ரேணுசாந் (யாழ். இந்துக் கல்லூரி), பி. துவாரகா, வி. நிஷாந்திகா, எஸ். றுக்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி), எம். சுமன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வி. லலிதாம்பிகா (வேம்படி மகளிர் கல்லூரி).

எம். பார்த்தீபன் (ஹாட்லி கல்லூரி), யு. நிவேதிகா, எஸ். யசோதரா, ரி. ஜேகளசிகா, ஜி. தட்சாயினி, ஆர். ஹச்சத்வனி (வேம்படி மகளிர் கல்லூரி), ரி. கிருஸ்ணபிரியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), எஸ். தாரணி (வேம்படி மகளிர் கல்லூரி), கே. சாயிகேஷன் (யாழ். இந்துக் கல்லூரி).


**வர்த்தகப் பிரிவு**

கே. அனித்தா (ஞானாசாரியர் கல்லூரி), பி. ராஜாராம் (ஹாட்லி கல்லூரி), என். டிலக்சி (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆர். குகேந்திரன் (ஹாட்லி கல்லூரி), அ. அகல்யா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), கே. சுயாதா, எஸ். கிரிதரன், ரி. சசிரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

வை. சரணியா, எம். மயூரி (இந்து மகளிர் கல்லூரி), ஏ. கோகுலன் (நெல்லியடி ம.ம.வித்தி), ஜெ. ஜெமில்ரன் (யாழ். மத்திய கல்லூரி), என். ஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி), வி. தர்சிகன் (ஹாட்லி கல்லூரி).

ஏ. லிதர்சினி (அருணோதயாக் கல்லூரி), ரி. ஜொனி (யாழ். மத் திய கல்லூரி), ஏ. கஜந்தினி (வேம் படி மகளிர் கல்லூரி), எம். பிரியங்கா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), என். லன்ரலா (வேம்படி மகளிர் கல்லூரி), ஏ. கௌரிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

ரி. தனசாந்தி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ப. அஜந்தன் (யாழ். மத்திய கல்லூரி), பி. தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ். துஸ்யந்தன் (யாழ். மத்திய கல்லூரி), என். அச்சுதன் (யாழ். இந்துக் கல்லூரி). (ஓ-4)



ஆசிரியர் தினத்தையொட்டி யாழ். மத்திய கல்லூரி கணனி வள நிலையத்தில் கணனிப்பயிற்சி முடித்து வெளியேறிய ஆசிரியர்கள் கணனி வள விரிவுரையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் ஆசிரியர் ஞான திருக்கேதீஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதையும் அதிபர் இ. ஓங்காரமூர்த்தி மற்றும் விரிவுரையாளர்கள் அமர்ந்து இருப்பதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

22.10.2009
(ஐப்பசி 05 வியாழக்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 12.01 மணிவரை
கேட்டை பின்னிரவு 2.11 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத பகை, வேலைச்சுமை, போசன சுகம், வாகனபயம். |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, அபூர்வ சந்திப்பு, போசன சுகம், நல்ல செய்தி. |
| மிதுனம் | சுவாரஸ்யம், சுபகாரியம், உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| கடகம் | குடும்பக் கவலை, சிறுவியாதி, வேலைச்சுமை, தனவிரயம். |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், சகோதரர் உதவி, தேவையற்ற பயம், அற்பர் உறவு. |
| கன்னி | வாக்கு மேன்மை, எடுத்த காரியம் கைகூடும், பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| துலாம் | மனோ சங்கடம், உஷ்ண ரோகம், காரியதாமதம், பொருள் விரயம். |
| விருச்சிகம் | புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, சயன சுகம், ஆழ்ந்த சிந்தை. |
| தனுசு | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல், திடீர் நன்மை. |
| மகரம் | புதிய திருப்பம், முயற்சி கைகூடும், நல்ல வருமானம், பெருமையடைதல். |
| கும்பம் | தூர தேசச் செய்தி, கடின உழைப்பு, அதிகாரம், பிறர் உதவி. |
| மீனம் | ஆன்றோர் சந்திப்பு, பித்த ரோகம், இடமாற்றம், புதிய தொழில் சிந்தை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 70 |
| தக்காளி | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 35 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 60 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 190 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 25 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35 |

# எந்த சூழ்நிலையிலும் தமிழர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது

## ஜனாதிபதி தெரிவித்ததாக சுதர்சன நாச்சியப்பன் தகவல்

(சென்னை)

அனைத்து தரப்பினரும் ஒத்துக் கொண்டால் மட்டுமே வடக்கு கிழக்கு பகுதிகளை இணைக்க முடியும். எந்த சூழ்நிலையிலும் பொலிஸ் அதிகாரம் தமிழர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக காங்கிரஸ் எம்.பி. சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்து திரும்பிய எம்.பி.க்கள் குழுவில் நடைபெற்று இருந்த காங்கிரசைச் சேர்ந்த சுதர்சன நாச்சியப்பன் தெரிவிக்கையில்,

ராஜீவ் ஜெயவர்த்தனா உடன்பாட்டில் தமிழர்களுக்கு பொலிஸ் அதிகாரம் தருவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆனால் ராஜபக்ஷவுடன் இதுகுறித்து பேசும்போது எந்த சூழ்நிலையிலும் பொலிஸ் அதிகாரம் தமிழர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

மேலும் வடக்கு கிழக்கு பகுதிகளை இணைப்பது குறித்து கேட்டதற்கு அனைத்து தரப்பினரும் ஒப்புக் கொண்டால் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

இதுபோன்ற பிரச்சினைகள் அனைத்தையும் எங்களிடம் விட்டு விடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று தெரிவித்த ராஜபக்ஷ இதற்கென ஒரு குழு அமைத்து மூன்று ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகிறது. அந்தக் குழு அளிக்கும் பரிந்துரைகளை ஏற்று அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

முகாம்களைப் பொறுத்த வரை மூன்று வகைகளாக பிரிக்கலாம். வீடு, நிலம் உட்பட சொத்துக்கள் வைத்திருப்பவர்கள் ஒருவகை. வடக்கு பகுதியில் சொந்த பந்தங்களை விட்டு பிரிந்து வாடுபவர்கள் இன்னொரு வகை. எந்த உறவுகளும் இன்றி தவிக்கும் அனாதைகளாக மற்றொரு வகை. இதில் முதல் வகையான சொத்து வைத்திருக்கும் தமிழர்களைத் தான் அரசு அதிகம் சோதனை செய்கிறது.

மொத்தம் மூன்று வகையான சோதனை நடைபெறுகிறது. வருவாய் அதிகாரிகள் மூலம் சோதனை, பொலிஸ் அதிகாரிகள் மூலம் சோதனை, இராணுவ அதிகாரிகள் மூலம் சோதனை என மூன்று அடுக்காக சோதனை செய்யப்படுகின்றனர்.

இந்த மூன்று சோதனை முடிந்த பிறகு இவர்களில் பெரும்பாலானவர்களை அவரவர் இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

வடக்கு பகுதியில் சொந்த பந்தங்கள் உள்ளவர்களையும் அனாதைகளாக இருப்பவர்களையும் தான் முகாம்களில் அதிகம் காணமுடிகிறது. அனாதையாக இருப்பவர்களை ஆதரவளித்து கூட்டிச் செல்ல தொண்டு நிறுவனங்கள் உட்பட யாரும் தயாராக இல்லை. முகாம்களை சீரமைக்க இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தான் உதவி வருகின்றன. காரணம் பிரிட்டன் போன்ற நாடுகள் வர்த்தக பரிவர்த்தனைகள் பலவற்றை நிறுத்திக் கொண்டு விட்டன. இதனால் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் இலங்கை அரசுக்கு பெரும் அளவு இந்தியா தான் உதவி வருகிறது.

தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் குறித்து கடற்படை அதிகாரிகளுடன் பேசினேன். கொழும்பு மீனவர்கள் டியூனா என்ற வகை மீன்களைத்தான் பெருமளவு பிடிக்கிறார்கள். தமிழக மீனவர்கள் பிரான் வகை மீன்களை பெருமளவு பிடிக்கின்றனர்.

எனவே இருநாட்டு மீனவர்களும் ஒரு வித இணக்கத்துடன் மீன்பிடி தொழில் செய்ய ஏற்ற வகையில் இருநாட்டு மீனவ தலைவர்களை அழைத்துப் பேச வேண்டுமென கேட்டுக் கொண்டேன். இதை பரிசீலனை செய்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் படகு சேவை விட வேண்டு மென்று கேட்டுக் கொண்டேன். தூத்துக்குடியை குறிப்பிட்டுத்தான் கோரிக்கை வைக்கப்பட்டதாக தெரிவித்தனர். தூத்துக்குடி என்பது சரக்கு துறைமுகமாகத்தான் கருத வேண்டும். எனவே இராமேஸ்வரம் தான் சரியாக வரும் என்று கூறியதை அடுத்து அதையும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொண்டனர்.

பெரும் சர்ச்சையை கிளப்பி வரும் கச்சதீவு பகுதியில் இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளும் இணைந்து சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க நடவடிக்கை எடுக்கும் படியும் வலியுறுத்தினேன். இதுகுறித்து உரிய முறையில் கவனம் செலுத்துவதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர். இவ்வாறு சுதர்சன நாச்சியப்பன் கூறினார். (ஓ-6)

## நியூசிலாந்தில் 100 கோடிரூபா செலவில் தாஜ்மகால்

நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தனியாக அமைப்பு ஒன்றை நடத்தி வருகின்றனர். இவர்கள் ஆக்லாந்தில் நிலம் வாங்கி அலுவலகம் அமைத்துள்ளனர். அதற்கு மகாத்மா காந்தி மையம் என பெயரிடப்பட்டு உள்ளது.

இங்கு ஏற்கனவே ரூ.30 கோடி செலவில் கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன.


இப்போது இந்த இடத்தில் ரூ. 100 கோடி செலவில் தாஜ்மகால் அமைப்பு கட்டிடம் கட்ட உள்ளனர். இந்திய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இது கட்டப்படுகிறது. சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் இதை பிரமாண்டமாக கட்ட திட்டமிட்டு உள்ளனர்.

இதற்காக நிதி திரட்டவும் ஏற்பாடுகளை செய்து உள்ளனர். இது குறித்து மகாத்மா காந்தி சென்டரின் தலைவர் கானுபட்டேல் கூறும் போது,

இந்திய சமூதாயத்தின் வரலாறு, கலாச்சாரம் போன்றவற்றை வெளி உலகுக்கு காட்டும் வகையில் தாஜ்மகாலை கட்ட உள்ளோம் என்றார். (ஓ-6)

## இலங்கை அரசின் குற்றச் செயல்களுக்கு எதிராக சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும்

### தொல் திருமாவளவன்



இலங்கை அரசாங்கத்துடன் கைக் குலுக்கி ஒரு வாரத்திற்கு பிறகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குற்றச் செயல்களை விசாரிக்க சர்வதேச சமூகங்கள் அழைப்பு விடுக்க வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் கோரியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர்கள் செய்த போர் குற்றங்களுக்காக அவர்கள் சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய நாடாளுமன்ற குழுவில் தொல் திருமாவளவனும் உள்ளடக்கப்பட்டிருந்தார். அவர் வவுனியா முகாமிற்கான விஜயத்தையும் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த முகாம்களில் உள்ள மக்களின் நிலை அறிந்தும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் பொது மக்கள் தொடர்பில் கரிசனை காட்டத் தவறுவது ஏன் என உணர முடியாதிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

முகாம்களில் 2 பேர் மாத்திரமே வசிக்கக் கூடிய பகுதியில் 8 தொடக்கம் 10 பேர் வரையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்து அதில் குறிப்பிட்டுள்ளார்.

இது பாரிய மனித உரிமை மீறலாக கருதும் அதேவேளை அடக்கு முறை கட்டவிழ்ப்பின் ஊடாக தமிழினத்துக்கு எதிரான குற்றங்களை மகிந்த அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இடம்பெயர்ந்தவர்களின் துரித குடியேற்றம் தொடர்பில் வலியுறுத்தி நாளைய தினம் சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

### பாரதச் செய்திகள்

# சென்னை விமான நிலையத்தில் இலங்கை வாலிபர் கைது

## ரூ.15 இலட்சம் பறிமுதல்

(ஆலந்தூர்)

இலங்கைக்கு ரூ.15 இலட்சம் இந்திய பணத்தை கடத்த முயன்ற வாலிபரை தமிழக பொலிஸார் கைது செய்தனர்.



சென்னையை அடுத்த மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு கொழும்பிற்கு புறப்படவிருந்த விமானத்தில் இந்திய பணம் கடத்தப்பட இருப்பதாக சுங்க இலாகா அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து சுங்க இலாகா ஆணையாளர் பெரியசாமி உத்தரவின் பேரில் சுங்க இலாகா அதிகாரிகள் விமான நிலையத்தில் கண்காணிப்பை தீவிரப்படுத்தினார்கள். அப்போது விமானத்தில் செல்ல இருந்த கொழும்பைச் சேர்ந்த அகழது முபாரக் (வயது 30) என்பவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை நடத்தினார்கள்.

அப்போது அவர், 15 நாட்களுக்கு முன் சென்னை வந்து மண்ணடியில் உள்ள நண்பர் வீட்டில் தங்கி இருந்தேன்.

மீண்டும் இலங்கை செல்கிறேன் என்று கூறினார். சுங்க இலாகா அதிகாரிகள் அவரது சூட்கேசை திறந்து பார்த்தனர்.

அதில் இந்திய பணம் ரூ. 15 இலட்சம் கட்டு கட்டாக இருந்தது. இதையடுத்து அந்த பணத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.


பின்னர் அகமது முபாரக்கின் பயணத்தை இரத்து செய்த அதிகாரிகள் அவரை கைது செய்தனர். அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ஹவாலா பணமாக இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இதுபற்றி தீவிர விசாரணை நடந்து வருகிறது.

இதேவேளை மேலும் 3 இலங்கையர்கள் ரூ. 3 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்கத்துடன் கொழும்புக்கு விமானத்தில் செல்ல முயன்றனர். அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ஓ-6)

# உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை புறக்கணிப்பதாக அ.இ.அ.தி.மு.க, ம.தி.மு.க கட்சிகள் அறிவிப்பு

கோவையில் அடுத்த ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெறவுள்ள உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டைப் புறக்கணிக்க போவதாக அ.இ.அ.தி.முகவும் அதன் கூட்டணிக் கட்சியான ம.தி.மு.கவும் அறிவித்துள்ளன.

இலங்கை மற்றும் மலேசியாவில் தமிழர்களின் அவல நிலையில் வாடும் போது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அவசியமென்ன என்று வினவும் அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கம் உலகத்தமிழ் மாநாடு நடத்த அனுமதி மறுத்ததாலேயே கருணாநிதி செம்மொழி மாநாடு நடத்துகிறார்.



2011 இல் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை மனதில் கொண்டே தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளவே அவர் இப்படி மாநாடு நடத்துகிறார். எனவே தனது கட்சி அதனைப் புறக்கணிப்பதாகக் கூறியிருக்கிறார்.

அதைப் போன்ற காரணங்களை சுட்டிக் காட்டி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவும் தனது கட்சியும் மாநாட்டைப் புறக்கணிக்கவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் அனைத்து சட்ட மன்றக் கட்சித் தலைவர்களுக்கும் மாநாட்டில் பங்கேற்குமாறு முதல்வர் கருணாநிதி அழைப்பு விடுத்திருந்தார்.

உலகத் தமிழ் மாநாடு ஒரு கட்சி சார்பான நிகழ்வாக இல்லாவிட்டாலும் கடந்த காலங்களிலும் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா முதல்வர்களாக இருந்த போது நடத்தப்பட்ட மாநாடுகளில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தும் உரிய அழைப்பில்லை எனக்கூறி கருணாநிதி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# ஆப்கானிஸ்தானில் அடுத்தமாதம் 7 ஆம் திகதி மறு தேர்தல்

## தேர்தல் ஆணையம் நடவடிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் அதிபர் தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் தற்போதைய அதிபர் ஹமீது கர்சாய் அதிக வாக்குகள் பெற்றார்.

எனினும் அவருக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் எண்ணிக் கையானது பதிவான மொத்த வாக்குகளில் 50 சதவீதத்துக்கும் குறைவானதாகவே இருந்தது. ஆப்கானிஸ்தான் நாட்டு தேர்தல் விதிகளின்படி 50, சதவீதத்துக்கு மேல் வாக்குகளை பெறுபவரே வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

இத்தகைய சூழ்நிலையில் தேர்தல் முடிவுகள் குறித்து ஆப்கானிஸ்தான் தேர்தல் ஆணையக ஆய்வு குழு பரிசீலித்தது. தேர்தலில் யாருக்குமே 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் கிடைக்காததால் அடுத்த மாதம் 7ஆம் திகதி அன்று மறு தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவை அதிபர் கர்சாயும் ஏற்றுக்கொண்டுள்ளார். மறுபடியும் தேர்தல் நடத்துவதற்கு அவர் ஒப்புக் கொண்டார். இந்த தகவலை தேர்தல் ஆணைய தலைவர் அஜிசுல்லா லோடின் நேற்று முன்தினம் தெரிவித்தார். மறு தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (ஓ-6)

# அவுஸ்திரேலியாவில் பூனையைக் கொன்றவருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை

(மெல்போர்ன்)

முன்னாள் காதலியின் பெற்றோர் வீட்டில் பெற்றோல் குண்டை வீசி பூனையை கழுத்தை நெரித்துக் கொன்ற அவுஸ்திரேலியருக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் மெல்போர்ன் நகரில் வசித்து வருபவர் பவுல்மெகர் (24) இவரும் லின்மே போர்கன் என்ற பெண்ணும் கடந்த 2008ஆம் ஆண்டு காதலிக்கத் தொடங்கினர்.

சில நாட்களிலேயே அவர்கள் இரு வரும் பிரிந்தனர்.

இந்நிலையில் வடக்கு மெல்போர்ன் நகரில் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள போர்கன் வீட்டுக்குள் நுழைந்த மெகர் பெற்றோல் குண்டுகளை வீசியதோடு வீட்டில் இருந்த 4 வயது பூனையை தொலைபேசி வயரால் கழுத்தை நெரித்துக் கொன்றார். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இவ் வழக்கை விசாரித்த நீதிபதி ஹாம்ப் பெல் ஈவு இரக்கமற்ற முறையில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட மெகருக்கு 9 ஆண்டுகள் 9 மாதங்கள் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித் தார். (ஓ-6)

# தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய நகரத்தை பாக். இராணுவம் கைப்பற்றியது

(பெஷாவர்)

பாகிஸ்தானில் உள்ள தெற்கு வசீரிஸ்தான் தலீபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த பகுதியில் உள்ள தலிபான்களை ஒடுக்குவதற்காக பாகிஸ்தான் இராணுவம் 30 ஆயிரம் இராணுவ வீரர்களை அங்கு அனுப்பி உள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் இராணுவத்துக்கும் தலிபான்களுக்கும் இடையே கடும் யுத்தம் நடந்து வருகிறது. இந்த சண்டையில் 78 தீவிரவாதிகள் பலியானார்கள். இராணுவத்தின் தரப்பில் 9 பேர் உயிர் இழந்தனர்.

தலிபான் தலைவரான ஹக்கீமுல்லா மசூத்தின் பிறந்த இடமான கொட்கை என்ற நகரத்தை இராணுவம் கைப்பற்றியது. கடந்த திங்கட்கிழமை இரவு அந்த நகரம் இராணுவம் வசம் வீழ்ந்தது. இதை மீண்டும் கைப்பற்றுவதற்காக தலிபான்கள் நேற்று முன்தினம் முதல் கடுமையாக யுத்தம் நடத்தி வருகிறார்கள்.

இரு தரப்புக்கும் சண்டை கடுமையாக நடந்து வருவதால் உயிருக்கு பயந்து மக்கள் ஊரை விட்டு பாதுகாப்பான பகுதிகளுக்கு தப்பி ஓடுகிறார்கள். கடந்த 13ஆம் திகதி முதல் 26ஆயிரம் பேர் தெற்கு வசீரிஸ்தானை விட்டு வெளியேறி உள்ளனர். கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் வெளியேறுவார்கள் என்று நம்பப்படுகிறது. (ஓ-6)

# இந்தோனேசிய ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகவும் சுஸிலோபம்பாங் பதவியேற்பு



இந்தோனேசியாவின் ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாக சுஸிலோ பம்பாங் யதோயொனோ நேற்று முன்தினம் பதவியேற்றார்.

கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்தே அவரது பதவிப் பிரமாணம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டிலிருந்து ஊழலை ஒழிப்பது அவரது தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் முக்கிய வகிபாகம் வகித்தது.

அவரது ஆட்சியின் கீழ் ஊழல் ஒழிப்பு முகவர் நிலையமானது அதிகாரத்துவம் பொருந்திய அமைப்பாகவே மாறியது.

எனினும் அவர் தற்போது பயங்கரவாதம் கடந்த செப்டெம்பர் மாதம் சுமாத்ராவைத் தாக்கிய பூமியதிர்ச்சியின் பிரதி கூல விளைவுகள் மற்றும் வேலை வாய்ப்பின்மை என்பவற்றால் ஏற்பட்ட நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுஸிலோ பம்பாங்கின் பதவியேற்பு வைபவத்தில் அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்டனர். (ஓ-6)

# இஸ்லாமாபாத்திலுள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரட்டைக்குண்டு வெடிப்பில் இருவர் பலி

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமா பாத்திலுள்ள இஸ்லாமிய பல்கலைக்கழக வளாகமொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இரட்டைக் குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது இருவர் பலியான துடன் 12 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இஸ்லாமிய சர்வதேச பாடசாலையில் மேற் கொள்ளப்பட்ட இந்த குண்டுத்தாக்கு தலானது கடந்த இரு வாரகாலப் பகுதியில் தலிபான்களால் மேற்கொள்ளப்பட்ட, ஏழாவது பிரதான தாக்குதலாகவுள்ளது.

பல்கலைக்கழகத்தின் ஆண்கள் மற்றும் பெண்கள் வளாகங்களில் இந்த குண்டு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

அதேசமயம் பாகிஸ்தானின் தென்வாஸிரிஸ்தான் பிராந்தியத்தில் தலிபான்கள் செறிந்து வாழும் பிரதேசங்கள் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 78 போராளிகள் பலியாகியுள்ளனர்.

ராஹ்-ஈ-நிஜாத்தில் புதிய இராணுவ நட வடிக்கை ஆரம்பமானதையடுத்து படைத்தரப்பில் 9 பேர் பலியானதுடன் 35 பேர் காய மடைந்துள்ளனர். தற்கொலை குண்டுதாரிகளுக்கு பயிற்சி வழங்கி வரும் காரி ஹுஸைன் வசிக்கும் கொட் காய் நகரை படையினர் சுற்றி வளைத்துள்ளனர்.

அதேசமயம் கொட்காயின் கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதியிலுள்ள போர் குன்டாய் மற் றும் ஷிஷ்வார்ம் பிரதேசங்கள் ஏற்கனவே இராணுவக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இப் பிரதேசங்களில் அநேக போராளிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதேசமயம் ஜமாலாஸர் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது சுமார் 15 போராளிகள் கைது செய்யப்பட்டனர். மேற்படி மோதல்களையடுத்து 14 ஆயிரத்துக் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் 11 ஆயிரம் குடும்பங்கள் அரசாங்க உதவிகளுக்காக பதிவு செய்துள்ளதாக பாகிஸ்தான் தகவல் அமைச்சர் காமர் ஸமான்கெய்ரா தெரிவித்தார். (ஓ-6)

# இஸ்ரேலுக்காக உளவு பார்க்க முயன்ற அமெரிக்க விஞ்ஞானி கைது

(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்காக அமெரிக்காவின் இரகசியங்களை வேவுபார்க்க முயன்ற அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் முன்னாள் விஞ்ஞானி கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் நாசாவில் (விண்வெளி ஆராய்ச்சிக் கழகம்) விஞ்ஞானியாக பணியாற்றியவர் ஸ்டூவர்ட் நொசெட்டே. 52 வயதான இவர்அங்கு பணிபுரிந்த காலத்தில், சந்திரனின் தென் துருவப் பிரதேசத்தில் தண்ணீர் இருப்பதை கண்டுபிடித்தார். அங்கு பணியாற்றிய பிறகு அவர் ஓய்வுபெற்றார். அதற்கு முன்னதாக அவர் எரிசக்தி துறையில் பணிபுரிந்தார்.




முன்னதாக சீனியர் புஷ் ஜனாதிபதியாக இருந்தபோது 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகள் வெள்ளைமாளிகையில் புஷ் தலைமையில் இயங்கிய தேசிய விண்வெளி சபையில் பணியாற்றினார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசியவர் தான் இஸ்ரேல் உளவுத்துறை அதிகாரி என்று கூறினார். ஆனால் உண்மையில் அவர் அமெரிக்க பொலிஸ் அதிகாரி ஆவார். நொசேட்டோமீது எழுந்த சந்தேகத்தை தெளிவுபடுத்திக்கொள்வதற்காக அவர் இஸ்ரேல் உளவுத்துறை அதிகாரி போல நடித்தார். இதை அறியாமல் நொசெட்டே, அவரை இஸ்ரேலிய உளவு அதிகாரி என்றே நம்பினார். அவரைச் சந்தித்துப் பேசினார். தான் பல உயர் பதவிகளில் இருந்ததால், தனக்கு எல்லா இரகசியங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய சக்தி உண்டு என்று அவர் கூறினார். செய்மதி தொழில்நுட்பங்கள் பற்றிய இரகசியங்களை பணத்துக்கு விறக் அவர் முன்வந்தார்.

இதைத் தொடர்ந்து அடுத்த சில வாரங்களில் நொசெட்டே, பொலிஸ் அதிகாரியிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு பல இரகசியங்களை விற்றார். அவர் அணு ஆயுதங்கள், இராணுவ செய்மதிகள் ஆகியவை குறித்த இரகசியங்களையும் விற்க அவர் முன்வந்தார்.

இதன்பிறகே அமெரிக்க பொலிஸார் அவரை கைது செய்தனர். வோஷிங்டனின் புறநகர் பகுதியான செவ்விசேஸ் என்ற இடத்தில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

நொசெட்டே மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சுயலாபத்துக்காக தேச நலன்களை காட்டிக்கொடுக்க முயன்றதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றம் நிரூபிக்கப்படுமானால், அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும் என்று தெரிகிறது. (ஓ-6)

# ஜெர்மனியில் நாளை தமிழ் இணைய மாநாடு

தமிழ் இணைய மாநாடு நாளை வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் தமிழ் தகவல் தொழில் நுட்பம் குறித்த இன்றைய சாதனைகளையும் எதிர்கால சவால்களையும் அறிஞர்கள், வல்லுநர்கள் கூடி விவாதிக்க உள்ளனர்

ஜெர்மனியில் உள்ள கோலென் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடக்கும் இந்த மாநாடு ஐரோப்பா கண்டத்தில் முதல் முறையாக நடைபெறுவது குறிப்பித்தக்கது.

*கணனி வழி காண்போம் தமிழ்* என்பதே இந்த மாநாட்டின் மையக் கருத்தாக இருக்கும். அதாவது அனைவரும் தமிழில் கணினியை பயன்படுத்தவும் இணைய வழிக் கல்வி கற்க வகை செய்வதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும் என்று சுவிற்சர்லாந்தில் வசிக்கும் உத்தமம் அமைப்பின் தலைவர் பேராசியர் கல்யாணசுந்தரம் கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் தமிழக அரசு பிரதிநிதியாக அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மு.ஆனந்தகிருஷ்ணன் கலந்து கொள்கிறார்.

மேலும் கணனித் தமிழ் சங்கத் தலைவர் ஆண்டோ பீட்டர் தமிழ் இணையப் பல்கலைக் கழக இயக்குநர் நக்கீரன் உட்பட 15இற்கும் மேற்பட்டோர் இந்தியாவில் இருந்து கலந்து கொள்கின்றனர். (ஓ-6)

# ஐப்பசி மாதப் பலன்கள்

## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் வரை)

**பொது நலத்தில் அதிக ஆர்வம் காட்டி புகழைக் குவிக்கும் சிங்க ராசி நேயர்களே!**

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் சூரியன் நீச்சம் பெற்று அதை நீச்சம் பெற்ற செவ்வாய் பார்ப்பதால், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் முடித்து காட்டுவீர்கள். அனைத்திலும் இருந்த தாமதங்கள் படிப்படியாக அகலும். ஆறில் இருக்கும் குரு சகட யோகத்தை உருவாக்குவதால் ஒரு தொகை செலவழிந்த பிறகே மற்றொரு தொகை வந்து சேரும்.

மாத தொடக்கத்தில் தன ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் ஒன்று கூடி சஞ்சரித்து கூட்டு கிரக யோகத்தை உருவாக்குவதால் கொடுக்கல் - வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். கூடுதல் லாபம் கிடைப்பதற்கான வழியிருந்தாலும், ஏழரைச்சனி நடப்பதால் திடீர் விரயங்களும் உருவாகலாம். குறிப்பாக, சனியின் ஆதிக்க காலத்தில் சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. காதணி விழா முதல் கல்யாண விழா வரை நடத்துவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். ஆதரவுக் கரம் நீட்டாது அண்டிச் சென்றவர்கள் கூட இனி அருகில் இருந்து உதவி செய்ய முன்வருவர்.

ராகு - கேதுக்களின் மாற்றமும் உங்களுக்கு போதுமான அளவிற்கு பொருளாதார விருத்தியைக் கொடுக்க நாக ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும், அனுமனையும் வழிபட்டு வந்தால் பணிகளில் தொய்வு ஏற்படாது.

அக்டோபர் 21 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிப்பதால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். வர வேண்டிய பாக்கிகள் வசூலாகும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

அக்டோபர் 27 ஆம் திகதி தனுசு ராசியில் ராகுவும், மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். கோதண்ட ராகுவாக சஞ்சரிப்பதால் அற்புத பலன்களை அள்ளி வழங்கும்.

இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பும் உருவாகும். இதுவரை இல்லாத புதிய நபரோடு இணைந்து புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவின் பலத்தால் நீண்ட தூரத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம்.

இல்லம் தேடி வந்த வில்லங்கங்கள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வளர்ச்சிப் பாதைக்குச் செல்ல ராகு - கேதுக்களின் சிறப்பு வழிபாடு உங்களுக்குத் தேவை.

நவம்பர் 4 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். பின் 7 ஆம் திகதி விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதற்கிடையில் வரும் மூன்று நாட்களும் முக்கியமான நாட்களாகும். திடீர் திருப்பங்கள் பலவும் நடைபெறும். நடைபெறாத சில காரியங்கள் நடைபெற்றது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். விருச்சிக புதனால் வீடு வாங்கும் யோகம் உருவாகும். சொத்துக்களால் லாபம் கிட்டும். வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும். கடித அனுகூலம் உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டு புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பணவரவு திருப்தி தரும்.

இம்மாதம் இனிய சம்பவங்கள் நடைபெற பௌர்ணமி தினத்தில் கிரிவலம் வருவது நல்லது. கரும்புவில் வைத்த அம்பிகையை வழிபட்டால், அரும்பும் துயரங்கள் விலகி ஆனந்தம் வந்து சேரும்.

## கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள் வரை)

**பக்குவமாகப் பேசி, பழகுபவர்களிடம் நல்ல பெயர் எடுத்துக் கொள்ளும் கன்னி ராசி நேயர்களே!**

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசியிலேயே நான்கு கிரகங்கள் ஒன்று கூடி மாதம் தொடங்குவதால் கூட்டுக்கிரக யோகம் செயல்படுகிறது. இருந்தாலும், தனாதிபதி சுக்ரன் நீச்சமடைகிறார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும். வாய்ப்புகள் பல வந்து வந்து விலகலாம். சொத்துக்கள் விற்பனையும் அதனால் மனக்கவலைகளும் அதிகரிக்கலாம். பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உருவாகலாம்.

அஷ்டமாதிபதி செவ்வாய் நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். சென்ற மாதத்தில் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை இப்பொழுது ஈடு செய்யும் வாய்ப்பு கிட்டும். குருமங்கல யோகம் ஏற்படுவதால் திடீரென சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிபுக்கு வரலாம். ராகு - கேதுக்களின் பெயர்ச்சி இம் மாதம் நடைபெற இருப்பதால் தொழில் மாற்றம், இடமாற்றங்கள் தொலை தூரத்திற்கு பயணம் செய்யும் வாய்ப்பு, பழைய வேலையிலேயே மீண்டும் இணையும் சூழ்நிலை போன்றவைகள் உருவாகலாம்.

சென்ற மாதத்தில் ஏற்பட்ட சனிப் பெயர்ச்சி ஓரளவு நல்ல மாற்றங்களைக் கொடுத்திருந்தாலும் இரண்டாவது சுற்று சனி நடப்பவர்கள் ஓரளவு நற்பலன்களைக் காண இயலும். சனி கவசம் பாடி சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதும் நல்ல காரியங்களுக்கு பிள்ளையார் சுழி போட வைக்கும்.

அக்டோபர் 21 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிப்பதால் தனஸ்தானம் வலுவடையும். எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் அமைதி கூடும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும்.

அக்டோபர் 27 ஆம் திகதி தனுசு ராசியில் ராகுவும் மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். இதன் விளைவாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர். பொறுப்புகள் கூடும். கட்டிடப் பணியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

மிதுன கேதுவின் சஞ்சாரத்தால் வழக்குகளில் வெற்றி கிட்டும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிக்க இயலும். தூர தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். தொழிலில் பழைய கூட்டாளிகள் விலகி புதிய கூட்டாளிகள் வந்திணைவர். எதிரிகளின் பலம் குறையும்.

நவம்பர் 4 ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். நவம்பர் 6 ஆம் திகதி வரை துலாத்திற்குள் புதனும் இருக்கிறார். புதனும், சுக்ரனும், சூரியனும் இணையும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். இனத்தார் பகை மாறும். எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**சிவல்புரி சிங்காரம்**

அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் ஆதாயம் கிட்டும். கொடுத்த வாக்கையும் காப்பாற்றுவீர்கள். புதிய திருப்பங்கள் பலவற்றையும் புதனின் பெயர்ச்சிக்கும் பிறகு நீங்கள் காணப் போகிறீர்கள். மாதக் கடைசியில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் புதனால் வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடி புக்கு வரும். பூர்விக சொத்துக்கள் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். விஷ்ணு வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

இம்மாதம் இனிய பலன்களை ஏராளமாக சந்திக்க நவகிரக வழிபாட்டில் கவனம்செலுத்துங்கள். ஆஞ்சநேயர் வழிபாடு உங்கள் அல்லல்களைத் தீர்க்கும். (தொடரும்)


யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

தரம் 6ற்கான அனுமதி - 2010
(தமிழ்மொழி மூலம்/ ஆங்கிலமொழி மூலம்)

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.
விண்ணப்ப முடிவுத் திகதி 10.11.2009
விடுதியில் தங்கியிருந்து கற்க விரும்பும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

வி.மாணிக்கம்
அதிபர்.

(C-3584)



IRQUE Project / University of Jaffna
Intensive Course In English / Information Technology
Final Examination - 2009

The above examinations will be held on 7th (English - 9.00 am to 3.30 pm) and 8th November 2009 (IT-9.00 am to 12.00 noon) in the Ramanathan hall of the University of Jaffna.

A speech test in English will be held at the ELTC of the University on 6th of November 2009 at 9.00 am for those who have missed the test conducted earlier.

**Director/LTS,**
**IRQUE Project,**
**University of Jaffna.**
**19.10.2009**

(C-3577)


## நோர்த் ஈஸ்டன் சஞ்சிகையின் பதிப்பாளர் ஜசிதரனையும் அவரது மனைவியையும் விடுதலை செய்ய தயாராகுமாறு பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கோடு சதித் திட்டம் தீட்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ள நோர்த் ஈஸ்டன் என்ற சஞ்சிகையின் பதிப்பாளரான வெற்றிவேல் ஜசீதரனையும் அவரது மனைவியையும் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்ய தயாராகுமாறு இலங்கையின் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டபோது பயங்கரவாத புலனாய்வு பணியகத்திற்கு எதிராக பிரதிவாதிகளால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவினை அவர்கள் விலக்கிக் கொண்டால் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப்பத்திரத்தை விலக்கிக் கொள்ள சட்டமாதிபர் தயாராகவுள்ளதாக அரச தரப்பு சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்துக்கு பதிலளித்த பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணி முதலில் சட்டமா அதிபர் குற்றப்பத்திரத்தை விலக்கிக் கொண்டு குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ததன் பின்னர் தமது அடிப்படை உரிமை மனுவை விலக்கிக் கொள்வதாகக் கூறினார்.

இதன்போது குறிக்கிட்ட நீதிபதி இரண்டு தரப்பினரும் இணங்கண்டு வழக்கினை விலக்கிக் கொள்ள முன்வர வேண்டும் எனவும் எதிர்வரும் 26 ஆம் திகதி அவர்கள் தமது தீர்மானத்தை அறிவித்ததன் பின்னர் பிரதிவாதிகளை விடுவிப்பது குறித்த தமது முடிவை அறிவிப்பதாகக் குறிப்பிட்டார். இதே நோர்த் ஈஸ்டன் சஞ்சிகையின் ஆசிரியர் ஜே.எஸ் திஸ்ஸ நாயகத்திற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் அண்மையில் 20 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## கடற்புலிகளின் முக்கிய தளபதியாக இருந்த தம்பியண்ணாவுக்கு ஓராண்டு சிறை

அலுமினியக் கட்டிகள் கடத்திய வழக்கில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் பிரிவின் முக்கிய தளபதியாகஇருந்ததாகக் கூறப்படும் தம்பியண்ணா என்ற டானியலிற்கு (வயது 48) ஓராண்டு சிறைத்தண்டனை விதித்து இராமேஸ்வரம் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு வெடிகுண்டுகள் தயாரிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் வழியாக அலுமினிய கட்டிகள் மற்றும் பால்ரஸ் குண்டுகள் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இவர் இராமேஸ்வரம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப் பட்டு செங்கல்பட்டு, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி குமரேசன், குற்றம் சாட்டப் பட்ட தம்பியண்ணாவுக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (ஓ-6)

> உனது திறமை ஒன்று என்றாலும், அதை ஒளித்து வைப்பது உன்னையே ஒழிப்பதற்கு சமமாகும்.
>
> – மில்ட்டன்

வலம்புரி

## அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் நிதானமாகச் செயற்பட வேண்டியகாலம்

தமிழ் கட்சிகள் என்று எழுதுவதற்கான சந்தர்ப்பம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பால் கிடைத்துள்ளது.

இனத்தின் மொழியின் பெயரில் கட்சிகள் இயங்க முடியாது. அவ்வாறு இயங்குவது நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கமாக அமையும் என்பது அரசின் நிலைப்பாடு.

எனவே இன, மத, மொழி சார்ந்த பெயர்களில் கட்சிகள் அமைப்பதை தடுக்கும் சட்ட மூலம் அரங்கேற இருந்த வேலை உயர் நீதிமன்றம் அதனை நிராகரித்து இனத்தின், மொழியின் பெயரில் கட்சிகள் இயங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கியது.

இதனால் தமிழ்க்கட்சிகள் என்று விழித்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஆகவே உயர் நீதிமன்றத்தால் தமிழ்க்கட்சிகளுக்குக் கிடைத்த உயிர்ப்பை நல்ல முறையில் பயன்படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

அதிலும் சமகால அரசியல் சூழமைவில் தமிழ்க் கட்சிகளின் நிதானமான போக்கு–ஒற்றுமையான செயற்பாடு–ஆழ்ந்த சிந்தனையின் முடிபில் எடுக்கப்படும் தீர்மானம்–கருத்துத் தெரிவிப்பதற்கு சகலருக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் என்ற பல்பரிமாண நிலைகளில் காத்திரமாகச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

இவற்றைச் செய்வதில் 'உணர்ச்சி வசப்படுதல்' என்பது மருந்திற்கும் இருத்தல் ஆகாது.

அதிலும் குறிப்பாக நாடாளுமன்றத்தில் உணர்ச்சிவசப்படும் பேச்சு ஆரோக்கியமானதல்ல. நாடாளுமன்றத்தில் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

தேவையில்லாத விடயங்களை பேசுவதால் தேவையான விடயங்களை பேச முடியாமல் போகும்.

குறிப்பாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சிகள் நிறுத்தினால் அதனை கூட்டமைப்பு எதிர்க்குமெனக் கூறியிருந்தார்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் அவர் கூறியதன் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மை என்ன?

அல்லது அவரின் உரை தமிழ் மக்களுக்கு சார்பாக, தென்னிலங்கை அரசியலில் எந்த வகையான சிக்கலை ஏற்படுத்தும் என்பது பற்றி ஆராய்ந்தால், எதுவுமே இல்லை என்ற உண்மை தெரியவரும். இதற்கு மாறாக அந்த உரை தென்னிலங்கை அரசியலில் தற்போதும், எதிர்காலத்திலும் இருக்கக் கூடிய சிக்கலில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்பதை முன்கூட்டியே வெளிப்படுத்தியுள்ளது.

இவ்விதம் முன் கூட்டியே தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது அரசியல் சாணக்கியமானதல்ல.

ஆக, கடந்த காலங்களில் விடப்பட்ட தவறை தமிழ்க்கட்சிகள் தொடர்ந்தும் விடும் பலவீனம் உண்டென்பதால், நாடாளுமன்றத்தில் அங்கம் பெறும் அனைத்துத் தமிழ் கட்சிகளும் கட்சி பேதம் மறந்து எங்கள் இனத்தின் பெயரால் சந்தித்து–சிந்தித்துப்பின் பேசினால் அது நாம் உரிமை பெறுவதற்கு பேருதவியாக அமையும்.

# இந்தோனேசியாவில் கைப்பற்றப்பட்டுள்ள கப்பலில் பயணித்தவர்கள் தொடர்பில் விசாரிக்க வேண்டும்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தோனேசியாவில் கைப்பற்றப்பட்டுள்ள கப்பலில் பயணித்தவர்கள் இலங்கையர்களாக இருப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. இது எமது நாட்டின் மீது சேறு பூசும் ஒரு செயற்பாடாகும்.

எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட்டு உண்மையை அறிய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. லக்ஷ்மன் செனவிரட்ண நேற்று முன்தினம் சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே லக்ஷ்மன் செனவிரட்ண எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யாழ்தேவி ரயிலில் இரண்டு பெட்டிகளை இணைப்பதற்காக செலவழிக்கப்படுகின்ற இலட்சக்கணக்கான ரூபா பணத்தில் மேலும் இரண்டு மூன்று ரயில் நிலையங்களை அமைந்திருக்க முடியும். அரசு அதனை செய்யவில்லை. காரணம் அரசாங்கம் இன்று வெறுமையாகியுள்ள அதே வேளை மக்களின் செல்வாக்கையும் இழந்துள்ளது.

இதற்கு நல்ல உதாரணமே தெற்கின் தேர்தல் முடிவாகும். ஒன்றுமில்லாத அரசாங்கம் ஒன்றுமில்லாத ஒரு விடயத்தை ஊதிப் பெருப்பித்துக் கொண்டிருக்கின்றது.

கடனைச் செலுத்த கடன் பெறுவதுதான் இன்றைய அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது. இவ்வாறு சகல விடயங்களையும் பொது மக்களுக்கு மறைத்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரான பஷில் ராஜபக்ஷ இன்று தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்வதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. ஏன் இத் தகைய பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் இன்று அரசாங்கத்தின் நிலைமைகளை மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றனர். தெற்கின் தேர்தல் முடிபும் அதன் அச்சமும் பஷில் ராஜபக்ஷ எம்.பி.யின் ராஜினாமா பிரசாரத்துக்கு காரணமாக இருக்கின்றது.

கடன் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற இன்றைய நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்காக குறைநிரப்பு பிரேரணை முன்வைக்கப்படுகின்றது.

அது குறித்து கவலையில்லை. இருப்பினும் திட்டமே இல்லாத வகையில் குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதே பிரச்சினையாகும்.

தற்போது எமது நாட்டுக்கு அபகீர்த்தி எழும் வகையில் பிரச்சினை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. எங்கிருந்தோ வந்த கப்பலில் ஒன்று இந்தியாவின் ஊடாக இந்தோனேசியாவை சென்றடைந்த போது அங்கு அந்த கப்பல் கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் பயணித்தவர்கள் இலங்கையர்கள் அல்ல.

இது திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட சதியாகவே தோன்றுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் எமது நாடடுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்படுவதை ஏற்க முடியாது. எனவே இவ்விடயத்தில் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

(ஓ-6)

# உத்தரப்பிரதேசத்தில் பயங்கர ரயில் விபத்து; 15 பேர் பலி பலர் காயம்

## நொறுங்கிய பெட்டிக்குள் பயணிகள் தவிப்பு

(மதுரா)

ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் இருந்து டெல்லி நிஜாமுதீன் செல்லும் மேவார் எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று முன்தினம் மாலை உதய்பூரில் இருந்து புறப்பட்டு டெல்லி நோக்கிச் சென்று கொண்டிருந்தது. நேற்று அதிகாலை 4மணிக்கு அந்த ரயில் உத்தரப்பிரதேச மாநிலம் மதுரா– விருந்தாபன் ரயில் நிலையங்கள் இடையே சிக்னலுக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

அப்போது கோவாவில் டெல்லி நிஜாமுதீன் செல்லும் கோவா எக்ஸ்பிரஸ் ரயில் அதே பாதையில் வந்தது. அந்த ரயிலுக்கும் சிக்னல் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் ரயில் சாரதி அதை கவனிக்காமல் ரயிலை ஓட்டி வந்தார். இதனால் கோவா எக்ஸ்பிரஸ் ரயில் அதே தண்டவாளத்தில் வந்து மேவார் எக்ஸ்பிரஸ் ரயிலின் பின் பகுதியில் உள்ள பெட்டியில் பயங்கரமாக மோதியது. மேவார் எக்ஸ்பிரஸ் ரயிலின் கடைசியில் பொது பெட்டி இணைக்கப்பட்டு இருந்தது.

மோதிய வேகத்தில்அந்தப் பெட்டி நொறுங்கியது.அதன் முன்னால் இருந்தமேலும் 2 பெட்டிகளும் ஒன்றோடு ஒன்று பயங்கரமாக மோதி தடம்புரண்டன. ரயில் மோதியபொது பெட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். அதிகாலை என்பதால் அயர்ந்து தூங்கி கொண்டிருந்தனர்.அவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

அவர்களில் 15 பேர்அந்த இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.20க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். ரயில் பெட்டிக்குள் 50க்கும் மேற்பட்டோர் சிக்கிக் கொண்டனர். அவர்கள் வெளியே வரமுடியாதபடி பெட்டி நொறுங்கி கிடந்தது.

அந்த இடத்துக்கு ரயில்வே பாதுகாப்புப்படையினரும், உள்ளூர் பொலிஸாரும் சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். பெட்டியை உடைத்து அவர்களை மீட்டனர். ஆனாலும் சில பயணிகள்ள மீட்கமுடியவில்லை.

சம்பவ இடத்திற்கு உயர் அதிகாரிகள் சென்று விசாரணை நடத்தினார்கள். ரயில் மந்திரி மம்மதா பானர்ஜி விபத்துக் குறித்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார். (ஓ-6)

# நகைச் சுவை மிகுந்த இறைவன்– பாபா

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அளயவற்ற மதிப்புக் கொண்ட தனது நேரத்தில் முக்கால் பகுதியை மாணவர்களுக்காகவே செலவிடுகிறார். சமுதாயத்தின் எதிர்காலம் இந்த கள்ளம் கபடமற்ற தெளிந்த இதயம் உள்ள குழந்தைகளையே முழுமையாக சார்ந்துள்ளது என்று கருதுகின்றார். அனைத்து அன்பையும் அவர்கள் மேல் பொழிகிறார்.

1983 இல் சத்ய சாயி கல்லூரி மாணவர்கள் பிருந்தாவனில் உள்ள மண்டபத்தில் ஒரு விஞ்ஞானக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.இக்கண்காட்சியினை பார்வையிட பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா வந்தார். கண்காட்சியில் மாணவர்களால் உருவாக்கப்பட்ட பல உருவ மாதிரிகளும் விஞ்ஞான உத்திகளும் உண்மை போன்று நினைக்கக்கூடியவாறு வடிவங்களும் வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு மாணவன் எச்சரிக்கை ஒலி தரும் கருவி ஒன்றை அமைத்து வைத்திருந்தான். ஒரு ஒளிக்கீற்று ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்கு செல்கிறது. இடையில் கை வைக்கப்பட்டால் எச்சரிக்கை ஒலி கேட்கும் வகையில் அவ் எச்சரிக்கை ஒலி தரும் கருவி அமைக்கப்பட்டிருந்தது.

ஸ்வாமியும் கண்காட்சியை சுற்றி வந்து அந்தக் கருவியை சென்றடையும் போது அதைத் தயார் செய்த மாணவன்; அவரிடம் 'ஸ்சுவாமி' தயது செய்து இந்த இடத்தில் கையை வைக்கவும் எச்சரிக்கை ஒலி தரும் என்றான். ஸ்வாமியும் அவ்வாறு செய்தார்; ஆனால் ஒரு ஒலியும் கேட்கவில்லை.

மாணவன் திகைப்புடன் கோளாறு ஏதோ இருப்பதாக எண்ணி அங்கும் இங்கும் ஏதோ சரி செய்தான். இரண்டு முனைகளுக்கு நடுவில் தன் கையை வைத்தான். தவறாமல் எச்சரிக்கை ஒலி கேட்டது.



அவன் நிச்சயத்துடன் ஸ்வாமியை மீண்டும் கையை வைக்கும்படி கேட்டான். ஆனால் மறுபடியும் ஒலி கேட்கவில்லை மாணவன் மிகவும் குழப்பமாகி விட ஸ்வாமி கூறினார்.

'அதை நீ திருத்தத் தேவையில்லை' நீ யாருக்காக ஏற்பாடு செய்தாயோ அத்தகைய திருடன் நான் அல்ல ; எனவே தான் அது ஒலிக்க வில்லை. எனக் கூறி நகர்ந்தார். விஞ்ஞானத்தால் ஸ்வாமி தொட இயலாது. அவர் விஞ்ஞானத்தைக் கடந்தவர்.

உலக நன்மைக்காகவே நான் அனைத்துச் செயல்களும் புரிகின்றேன். எனது நன்மைக்காக அல்ல. இதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

ஆகவே நான் எப்போதும் இடையறாத ஆனந்தத்தில் திளைத்திருக்கிறேன்.

ஜெய்சாயிராம் யாதவன்

## 200 அமைப்புக்கள் அரசுக்கு எதிராக போலி அறிக்கை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்கக் கூடாது என்ற நோக்கத்தில் சுமார் 200 அமைப்புகள் அரசாங்கத்திற்கு எதிராக போலியான தகவல்களை வெளியிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உள் நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இரகசியமான முறையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இந்தத் தகவல்களை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சனல்-4 காணொளி உண்மையானது என உறுதிப்படுத்தும் வகையில் அமெரிக்க நிறுவனம் ஒன்று அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக சுட்டிக்காட்டப் படுகிறது.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் நபர்கள் மின் அஞ்சல் மூலம் இலங்கைக்கு வரிச்சலு கையை வழங்கக்கூடாது என கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஓ-6)

# யாழ்.மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை மத்தியவங்கி நடைமுறைப்படுத்த வேண்டும்

## பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை மத்திய வங்கி விரைவில் முன்னெடுக்க வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநரிடம் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார்.

இலங்கை வங்கி அதிகாரிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மத்திய வங்கியின் உதவி ஆளுநர்கள் ,ஜனாதிபதியின் வங்கித் துறை ஆலோசகர் கலாநிதி ராணிஜெயமக , இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க ஆகியோரும் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ,பேராசிரியர் என் .நடராசசுந்தரம் ,யாழ். அரச அதிபர் க.கணேஷ் , இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களும் கலந்து கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் மத்திய வங்கியின் விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து மத்திய வங்கி ஆளுநரிடம் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்தார்.

❖ மத்திய வங்கியின் கிளை யாழ். மாவட்டத்தில் திறக்க வேண்டும்.

❖ நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல புதிய பாடத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எனவே பாரம்பரியமான பாடங்கள் அறிமுகம் செய்யப்படும் போது அவற்றை ஊக்குவிக்கும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

❖ யாழ். மாவட்டத்தில் பலரிடம் காணிகளின் தாய் உறுதி இல்லாமை பெரும் குறையாகவுள்ளது. இதனால் வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொள்வதில் பலர் சிரமத்தை எதிர்நோக் குகின்றனர்.

எனவே கடன் வழங்கும் போது வங்கி கள் காணியின் தாய் உறுதிக்குப் பதிலாக புதிய அணுகுமுறைகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ யாழ். மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி மற்றும் சிறு கைத்தொழில் விருத்திக்கு பல திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் . குறிப்பாக வலி கிழக்கில் கலட்டுக்காணிகளாக உள்ளவற்றை கல் அகற்றப்பட்டு பயிர்ச்செய்கைக்கு ஏதுவான காணிகளாக மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனால் நெற் செய்கையும் அதகிரிப்பதுடன் அங்கிருந்து அகற்றப்படும் கற் கள் வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியும்.

❖ யாழ். மாவட்டத்தில் இருந்து வங்கிகள் பெற்றுக்கொள்ளும் சேமிப்புக்களை தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லாமல் இங்கேயே மீள முதலீடு செய்யும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

❖ கல்வியாளர்கள், அரச அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கணனி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான கடன் உதவித் திட்டத்தை வங்கிகள் மூலம் ஏற்படுத்த வேண்டும். இக் கடன் திட்டம் இலகுவானதாக அமைய வேண்டும் போன்ற கோரிக்கைகளை பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மத்திய வங்கி ஆளுநரிடம் முன் வைத்தார்.

நிகழ்வில் தொடர்ந்து பேசிய பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை யாழ்ப்பாணத்தில் சீராகக் கிடைக்கக்கூடியவாறு வகை செய்யப்படவேண்டும் என்றார்.

(ஓ-5)

# புகலிடம் கோரும் இலங்கையர்கள் தொடர்பில் கடும் போக்கை கடைப்பிடிக்க கனடா முடிவு

## கனடிய குடிவரவு அமைச்சர்

(கொழும்பு)

கனடாவில் புகலிடம் கோருவோர் மீது மென்போக்கு கடைப்பிடிக்கப்படுவதாக நிலவும் அபிப்பிராயத்துடன் அரசாங்கம் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டின் மேற்கு கரையோரத்தில் துருப்பிடித்த படகு ஒன்றில் வந்து சேர்ந்த இலங்கையர்கள் என்று நம்பப்படும் 76 பேருடன் தாம் கடும் போக்கை கடைப்பிடிக்க இருப்பதாக அந் நாட்டின் குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனடி தெரிவித்துள்ளார்.

தமிழ் கனடியர்கள் இந்த படகு மக்கள் மீது கருணை காண்பிக்குமாறு கனடிய அதிகாரிகளை வற்புறுத்தி வரும் அதேவேளை இந்த குடியேற்றவாசிகளின் சட்டவிரோத படகுப் பயணம் அதிகரித்து வரும் சட்ட விரோத ஆட்கடத்தல் பிரச்சினையை சுட்டிக் காட்டுவதாக இருக்கிறது என்று அமைச்சர் கெனடி த குளோப் அன்ட் மெயில் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

அநேகமான புகலிடக் கோரிக்கைகள் பொய்யானவை என்று நம்பப்படுவதாகவும் அவை தொடர்பாக கடும் சட்டங்களை கொண்டு வரப் போவதாகவும் கடனாவின் கொன்சர் வேற்றிவ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு வகை குடிவரவு முறைமைகளை கடைப்பிடிக்கும் நாடு என்ற பெயரைப் பெற்றுக் கொள்ள தாங்கள் விரும்பவில்லை என்று அமைச்சர் கெனடி தெரிவித்தார். கனடாவுக்கு வர பொறுமையுடன் காத்திருக்கும் சட்ட ரீதியான சட்டத்தை மதித்து நடக்கும் குடியேற்ற வாசிகள் ஒரு வகையினராகவும் பின் கதவு வழியாக புகலிடக் கோரிக்கை மூலம் கடனாவுக்கு வர முயல்வோர் இரண்டாவது வகையினராகவும் இரு வகையினர் இருப்பதை அவர் பேட்டி ஒன்றின் போது சுட்டிக் காட்டினார்.

புகலிடம் வழங்கும் முறைமையை துஷ்பிரயோகம் செய்யும் இரண்டாவது வகையினருக்கு குடிவரவுக் கதவை மூடிவிடுவது சிறந்தது என்று தாங்கள் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஓ-6)

# சாட்டி கடற்கரையை சுற்றுலாத்துறை மையமாக்கும் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சாட்டிக் கடற்கரைப்பகுதியை சுற்றுலாத் துறை மையமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலணைப்பிரதேச சபையினால் சாட்டிக் கடற்கரைப்பகுதியை சுற்றுலாத் துறை மையமாக்கல் பணிகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இதற்காக தற்போது சாட்டிக்கடற் கரைப் பகுதி துப்பரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய சாட்டிச் சுற்றுலாத் துறை மையாமாக்கும் வேலைத்திட்டத்தின் மேலதிகப்பணிகளை நகர அபிவிருத்தித் திணைக்களமும் சுற்றுலாத்திணைக்களமும் முன்னெடுக்கும் என யாழ் .உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் குறிப்பிட்டார்.

(ஓ-5)

# மாபெரும் புத்தகக் கண்காட்சி 28ஆம் திகதி யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதிவரை மாபெரும் புத்தகக் கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு நூல்களில் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் நீண்ட காலமாக ஏற்படுத்தப்படவில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28 ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதி வரை யாழ்.மத்திய கல்லூரியில் மாபெரும் புத்தகக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இக் கண்காட்சியில் நாட்டின் முன்னணி புத்தகசாலைகள் பங்குபற்றி பல்வேறு துறைசார்ந்த நூல்களையும் காட்சிப்படுத்தப் படவுள்ளதுடன் விற்பனைகளும் இடம் பெறும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் குறிப்பிட்டார்.

(ஓ-5)




நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி விளையாட்டு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட வலி கிழக்கு பிரதேச பொறுப்பதிகாரி திருமதி பே.சுகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினரான யாழ். செயலக கணக்காளர் குகதாஸ் மற்றும் ஏனைய விருந்தினர்கள் நிற்பதையும் மாணவர்களின் பாண்ட் வாத்திய நிகழ்வையும் படங்களில் காணலாம்.



சுதுமலை ஈஞ்சடி நாவலர் பாலர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் உரையாற்றுவதையும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்களை வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# இந்திய மண்ணில் வெல்வது கடினம் அணித் தலைவர் பொன்டிங் கணிப்பு



(புதுடில்லி)

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் அவ்வளவு எளிதாக வெல்ல முடியாது என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பொன்டிங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. இதன் முதல் போட்டி எதிர் வரும் 25 ஆம் திகதி வதோதராவில் நடக்கவுள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பொன்டிங் கூறியதாவது,

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் தோல்வியடையச் செய்வது என்பது எப்போதும் மிகவும் கடினம். வெளிநாட்டுத் தொடர்களின் போது விளையாடுவதை விட தோனி தலைமையிலான இந்திய வீரர்கள், உள்ளூரில் உறுதியாக, சிறப்பாக விளையாடுவார்கள்.

சம்பயன்ஸ் தொடரில் இந்திய அணி தோல்வியடைந்துள்ளதால் குறைத்து மதிப்பிட்டு விடக் கூடாது. நமக்கு எதிரான தொடருக்காக அணியில் பல மாற்றங்களை அவர்கள் செய்துள்ளார்கள்.

## துரத்தும் காயம்

அணியின் இளம் வீரர் பெர்குசன், நாதன் பிரக்கன் போன்ற வீரர்கள் காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது. துணைத் தலைவர் மைக்கெல் கிளார்க்கும் காயம் குணமடைந்து தொடரின் பின் பகுதியில்தான் அணியில் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிலையில் நானும் தேர்வுக் குழுவினரும் இணைந்து அடுத்த சில நாள்களில் துடுப்பாட்ட வரிசையை முடிபு செய்யவுள்ளோம்.

## மார்ஷ் வருகை

கடந்த 7 மாதங்களுக்கு முன்பு ஷோன் மார்ஷ் அவுஸ்திரேலிய அணியின் சிறந்த முதல்தர துடுப்பாட்ட வீரராக இருந்தார். டிம் பெய்னேவுடன் சேர்ந்து இப்போது ஷோன் மார்ஷும் அணிக்குத் திரும்புவதால் சில கடினமான முடிபுகளை எடுக்க வேண்டியுள்ளது.

எப்படியிருப்பினும் அவுஸ்திரேலிய அணி சிறந்த துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டுள்ளது. முதல் போட்டி ஆரம்பமாகும் நாளன்று எப்படியும் சரியான அணியுடன் களமிறங்குவோம் என்ற நம்பிக்கையுள்ளது. இவ்வாறு பொன்டிங் தெரிவித்தார்.

## ஹர்பஜன் நம்பிக்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடர் குறித்து இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் கூறியதாவது,

மெக்ராத், வோர்ன் மற்றும் ஹடைன் போன்ற மூத்த வீரர்களின் ஓய்வுக்குப் பின்பு அவுஸ்திரேலிய அணி மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது. அவர்கள் எப்போதும் கடினமானவர்கள்தான்.

கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான ரெஸ்ட் தொடரை இழந்த பின்னர் இந்தியாவில் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கையில் உள்ளனர். ஆனால் நமது அணி சிறப்பாக விளையாடுவதால் எந்த அணியையும் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம்.

## ஆர்வம் வேண்டும்

இந்திய அணியின் ஆடையை அணியும் போதெல்லாம் நான் விரைவில் உணர்ச்சி வசப்பட்டு விடுவேன். பொதுவாக எந்தவித ஆர்வமுமில்லாமல் இருந்தால் வாழ்க்கையில் இலட்சியங்களை அடைய முடியாது.

இதில் நான் மிகுந்த ஆர்வம் உள்ளவன். உலகின் சிறந்த அணிக்கு எதிராக அசத்தலான திறமையை வெளிப்படுத்தத் தயாராகவுள்ளேன்.

இளம் வீரர்கள் செய்யும் அனைத்துத் தவறுகளையும் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. ஏனெனில் நானும் ஆரம்ப காலங்களில் தவறுகள் செய்தவன்தான். என்னைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மூத்த வீரரும் பொறுப்பாகச் செயற்பட வேண்டும் என நினைப்பவன். நானும் அதைத்தான் செய்கின்றேன். இவ்வாறு ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

## ஒளிபரப்பு உரிமம் 2 ஆயிரம் கோடிக்கு நிம்பஸ் ஒப்பந்தம்

(மும்பை)

இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பும் உரிமையை மேலும் 4 ஆண்டுகளுக்கு நிம்பஸ் நிறுவனம் பெற்றுள்ளது. இதற்காக இந்தியக் கிரிக்கெட் சபையுடன் ரூ.2 ஆயிரம் கோடிக்கு ஒப்பந்தம் செய்திருக்கின்றது.

இதன்படி ஒவ்வொரு சர்வதேச போட்டிக்கும் ரூ.31.5 கோடியை நிம்பஸ் நிறுவனம் இந்திய கிரிக்கெட் சபைக்கு வழங்கும். 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை இந்த உரிமம் பொருந்தும்.

நிம்பஸ் நிறுவனத்திற்கு சொந்தமான நியோ கிரிக்கெட் மற்றும் நியோ ஸ்போர்ட்ஸ் சனல்களில் போட்டிகள் ஒளிபரப்பாகும்.

## முதியோர் தின விழா

சமூக அபிவிருத்தி மன்றத்தின் முதியோர் தின விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு 109, பருத்தித்துறை வீதி, நல்லூர் எனும் முகவரியிலுள்ள சமூக அபிவிருத்தி மன்ற காரியாலயத்தில் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் ஆரம்பமாகும். (ச)

# மகா கட்ரின புண்ணிய பூஜை நாகவிகாரையில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

பௌத்த மக்களின் விசேட வழிபாடான மகா கட்ரின புண்ணிய பூஜை இன்று யாழ். நாக விகாரையில் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் 51-வது படையணியின் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

பௌத்த சமயத்தைப் பின்பற்றும் பக்தர்களின் விசேட சமய வழிபாடாக மகா கட்ரின புண்ணிய பூஜை வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தியாவில் புத்த பெருமான் வாழ்ந்த காலத்தில் இந்திய மக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் மாரி காலத்தில் ஒரே விகாரையில் தங்கியிருந்து பௌத்த துறவிகளால் தர்மப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது.

இந்த மூன்று மாத மழை காலத்தின் பின்னர் வரும் மாதத்தை சீவர மாதம் (துறவிகள் அணியும் ஆடையின் பெயர்) என்று பெயரிட்டு அனைத்து விகாரையிலும் இந்த கட்ரினப் பூஜையை பௌத்த மக்கள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர்.

இந்த புனித பூஜையின் பின்னர் அந்த விகாரைக்கு கட்ரின என்ற காவி உடை ஒன்று பூஜை செய்யப்படும். யாழ்ப்பாண ஸ்ரீ நாக விகாரையில் நடத்தப்படும் இந்த கட்ரின பூஜைக்கு பௌத்தர்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தவர்களினதும் பாரிய பங்களிப்பு கிடைப்பதுடன் யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதியின் பாரிய ஒத்துழைப்புக் கிடைக்கப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் 51-வது படையணியின் மேற்பார்வையில் அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் 2009.10.22 ஆம் திகதி இரவு 7 மணிக்கு கண்ணைக் கவரும் முழு கட்ரினப் பூஜை பெரகரா வீதி வலம் வரும்.

யாழ்.பிரதேச மக்களுக்கு மூன்று தசாப்த யுத்தத்தின் பின்னர் கண்டுகளிக்கக் கிடைக்கும் முதலாவது கட்ரின பூஜை இதுவாகும். பெரகரா ஊர்வலமாக நாக விகாரைக்கு அருகிலிருந்து ஆரம்பமாகி ஆஸ்பத்திரி சந்தி வரை சென்று ஆஸ்பத்திரி வீதி, இராசாவின் தோட்டம் வீதி, இராசாவின் தோட்டம் சந்தி ஊடாக நாவலர் வீதி, ஆனைப்பந்தி வீதிக்கு வந்து அங்கிருந்து பருத்தித்துறை வீதியூடாக நாகவிகாரையை வந்தடையும்.

அதன் பின்னர் 20ற்கும் மேற்பட்ட பிக்குமாரினால் யர்ழ்.பிரதேச மக்களுக்காகவும் குரூர யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வந்து மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த படைவீரர்களுக்கும் ஆசி வேண்டி இரவு முழுவதும் பிரித் ஓதப்படுவதுடன் இதில் யாழ்ப்பாணத்தில் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த மாபெரும் புண்ணிய செயற்பாட்டில் அனைவரையும் கலந்து கொண்டு ஆசி பெற்றுக் கொள்ளுமாறு வரலாற்றுப் புகழ் மிக்க ஸ்ரீ நாகவிகாரையின விகாராதிபதி புனித மீகாஜதுரே [illegible] சுவாமிகள் அழைக்கின்றார் (ச)



1987 ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்த போது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 21 உத்தியோகத்தர்களினதும் 22-வது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதில் உத்தியோகத்தர் ஒருவரின் உறவினர் மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் தாதிய உத்தியோகத்தர்கள் பாடல் இசைப்பதையும் படங்களில் காணலாம்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## எதிர்க்கட்சி பொது வேட்பாளராக...

ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், முன்னாள் இராணுவத்தளபதியும் பாதுகாப்பு தலைமை அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பில் நேற்று இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு தலைவர் மங்கள சமரவீரவின் ஏற்பாட்டில் இந்த சந்திப்பு நடந்துள்ளது என்றும் ஐக்கிய தேசிய உள்ளகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் கண்டியில் அவ்வாறான சந்திப்பொன்று இடம்பெற்றது. ஐக்கிய தேசிய கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்ன மற்றும் பௌத்த பிக் குமார் சிலரும் அந்த சந்திப்பில் பங்குபற்றி இருந்ததாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை எதிர்க்கட்சி கூட்டமைப்பில் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு சரத் பொன்சேகா இணக்கம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிக்கொத்தாவை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சரத் பொன்சேகா சந்தித்த பின்னரே இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அது தொடர்பாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் எஸ்.பி. திஸாநாயக்காவுடன் கலந்துரையாடி வருகின்றனர் என்று மற்றுமொரு தகவல் கூறுகின்றது.

இதேவேளை எதிர்க்கட்சி கூட்டமைப்பில் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை பொதுவேட்பாளராக நிறுத்துவதற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ஜே.வி.பி.யின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கு ஜே.வி.பி. அனைத்து உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இது தொடர்பாக விளக்கமளித்த லால்காந்த இதற்காக பொது வேலைத்திட்டம் ஒன்றை எதிர்க்கட்சி கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சரத்பொன்சேகாவின் சேவைகளை நாட்டுக்கு பெற்றுக்கொள்வதில் தாம் பெருமை அடைவதாகவும லால்காந்த சொன்னார்.

சரத்பொன்சேகாவை பொதுவேட்பாளராக நிறுத்துவதற்கு எதிர்க்கட்சி கூட்டமைப்பு தீர்மானம் எடுத்துள்ளமையினால் அரசாங்கம் கலக்கம் அடைந்துள்ளதாகவும் தெரிவித்த லால்காந்த இந்த முடிபு அரசாங்கத்திற்கு பெரும் சவால் என்றும் விளக்கமளித்தார்.

பயங்கர வாதம் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டதை தமது அரசியல் தேவைகளுக்காக அரசாங்கம் பயன்படுத்தி வந்ததாகவும் குற்றம் சாட்டிய லால்காந்த பயங்கர வாதத்திற்கு எதிராக இராணுவம் பெற்ற வெற்றி மக்களின் வெற்றி என்றும் எடுத்துக் கூறினார்.

ஜே.வி.பி. எடுத்த இந்த முடிபில் மாற்றம் இல்லை என்றும் பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட உள்ளதாகவும் லால்காந்த மேலும் விபரித்தார். (ச-5)

## வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஒன்று கூடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30க்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இவ் ஒன்று கூடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனான சந்திப்பும் இடம் பெறவுள்ளது. (ச-3)

## சர்வதேச நாண...

கடனை இந்தியா இலங்கைக்கு வழங்கும் என பிரதிநிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் இந்த உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு உதவிகளை வழங்க தயார் என இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் சர்வதேச நாணய நிதியத்திற்கு நேரடியாக தெரிவித்துள்ளார். இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் ஆதரவு அளிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியப் பிரதிநிதிக்கு அந்நாட்டு நிதியமைச்சர் தொலைபேசி மூலம் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ச-5)

## நான்கு சிறு...

கிழக்கு மாகாணங்களில் முஸ் லிம்களும், தமிழர்களும் ஒன்றாக வாழவேண்டும் என்பதால் இந்தப் பிரதேசத்தைப் பிரதிநி தித்துவப்படுத்தும் கட்சிகள் இணைந்து செய ற்பட வேண்டும் எனவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கொழும்பில்...

செய்யப்பட்டதாக உறவினர்கள் கூறுகின்றனர். அடையாள அட்டை மற்றும் ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் வேறு ஆவணங்கள் இல்லாமையினால் இவர்களை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## தடுப்பூசி குப்பிக்குள் இலை...

அண்மைக் காலமாக ஏற்பட்டுவரும் சிக்கல் நிலைமைகளைக் காட்டுவதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருபெல்லா தடுப்பூசி மருந்துப் பிரச்சினை, பன்றிக் காய்ச்சல் நெருக்கடி, தடுப்பூசிக் குப்பிக்குள் கண்ணாடித்தூள்கள் என்ற வரிசையில் தற்போது தடுப்பூசிக் குப்பிக்குள் இலையானும் புகுந்து சர்ச்சைகளைத் தோற்றுவித்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான அச்சுறுத்தல் நிலைக்கு சுகாதாரத் துறைதள் எபட்டுள்ளதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க குற்றஞ்சுமத்தியுள்ளார். (ச-14)

## தமிழர்களுக்கு ஆயுதங்களை...

இதையாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

தமிழர்களிடம் ஆயுதங்கள் இருந்தால் இலங்கை இராணுவத்தினர் இளைஞர்களை சுட்டுக்கொல்ல மாட்டார்கள். எனவே எங்களிடமுள்ள நவீன ஆயுதங்களை தமிழர்களுக்கு வழங்குவோம்.

சித்திரவதை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்தண்டிக்கப்பட வேண்டும் நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஆயுத உதவி செய்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இதற் கென்று தனி குழுக்களை ஏற்படுத்தி உள்ளோம்.

எங்களது நக்சலைட் இயக்கத்தில் தமிழகம்–கேரளாவைச் சேர்ந்த நிறைய இளைஞர்களை சேர்க்க முடிவு செய்துள்ளோம். இதற்காக தமிழகம்–கேரளா எல்லைப்பகுதிகளில் விரைவில் முகாம்கள் அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

நாங்கள் தற்போது மேற்கு வங்காளம், ஒரிசா, பீகார், ஜார்கண்ட் மாநிலங்களில் பலத்துடன் உள்ளோம். தென்மாநிலங்களில் எங்கள் அமைப்பை பலப்படுத்தும் பணியை தீவிரப்படுத்தி உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். (ச-5)

## யுத்தகாலத்தின் போது இல....

தெரிவித்துள்ளார்.

அரசியல்துறை பொறுப்பாளர் நடேசன் மற்றும் சமாதான செயலக தலைவர் புலித்தேவன் உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் வெள்ளை கொடிகளுடன் மே மாதம் 17ஆம் திகதி காலப்பகுதியில் சரணடைந்தனர்.

இது தொடர்பில் சரணடைவதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலாளர் பான் கீ மூன், ஐக்கிய நாடுகளின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் மற்றும் ஐக்கிய நாடுகளின் பல சிரேஷ்ட உறுப்பினர்களுடனும் அவர்கள் செய்ம்மதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர்.

இதில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகனவும் இணைந்திருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சரணடைந்த புலி உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டதாக பேராசிரியர் செல்லசாமி தெரிவித்துள்ளார். இதற்கு தேசிய புலனாய்வுத் துறையினர் பாரிய ஒத்துழைப்பை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கிழக்கு யுத்தத்தின் போது சரணடைந்ததாக கூறப்படும் 600 பொலிஸாரை புலிகள் கொன்றமை தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. (ச-5)

## மாநகர சபை....

பூர்த்தி செய்வதனை நோக்கமாக கொண்டு செயற்படுவதற்கு யாழ். மாநகர சபை நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

மாநகர சபையின் அனுமதியுடனேயே விளம்பரதாரர்கள் வீதிகளில் விளம்பர பதாகைகளை கட்டவேண்டும்.

மாநகர எல்லைக்குட்பட்ட குத்தகை கட்டிடங்களிலிருந்து பெறப்படும் வருமானம் போதியளவில் இல்லை இதனால் எமது தேவைகளினை நாமே பூர்த்திசெய்ய முடியாமலுள்ளது எனவும் அவர்கூறினார். (ச-5,30)

## மீளக் குடியமர்ந்த மாண...

அவர் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்கள் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இதில் எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த. சா/த பரீட்சைக்கு தோற்றுவதற்கென வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து விண்ணப்பித்த மாணவர்களும் அடங்குவர்.

எனவே யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளவர்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் மீளவும் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

குறித்த மாணவர்கள் தற்போது கல்வி கற்கும் பாடசாலைக்குரிய கல்வி வலயத்தில் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பங்களை பாடசாலைகள் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

இதேவேளை கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கணித பாட மீள் பரீட்சை நடத்தப்படவில்லை.

அம் மாணவர்களுக்கு விசேட பரீட்சையை நடத்த பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறித்த கணித பாட விஷேட பரீட்சைக்கு வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து விண்ணப்பித்த மாணவர்களில் தற்போது யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளவர்கள் மீளவும் தற்போதுள்ள பாடசாலை ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

எனவே கடந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றி கணித பாட மீள் பரீட்சை நடத்தப்படாத மாணவர்கள் விஷேடப் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறும் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (ச-5)


## சுகவாழ்விற்கான பயணம் சுகாதார மருத்துவ கண்காட்சி

இடம்:– சுகவாழ்வுக்கான பயணம்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
காலம்:– 23,24 & 25 ஒக்ரோபர் 2009 காலை 8.30 மணி-மாலை 4.00 மணி

**பிரதம விருந்தினர்:**
கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா
அமைச்சர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை

**கௌரவ விருந்தினர்:**
மதிப்புக்குரிய திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
முதல்வர், யாழ். மாநகரசபை.

**சிறப்பு விருந்தினர்கள்:**
★ Dr.N.சிவராஜா: ஆலோசகர், உலக சுகாதார ஸ்தாபனம்
★ Dr.A.கேதீஸ்வரன்: பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
★ Dr.S.சிவன்சுதன்; பொது வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை

அனுமதி ரூ. 20/=

☞ தாய்சேய் நலம் ☞ பாலியல் சுகாதாரம்
☞ போசாக்கு ☞ இனப்பெருக்கச் சுகாதாரம்
☞ வீட்டுத்தோட்டம் *மற்றும் பல அம்சங்களுடன்*

*தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*
2ம் அணி மாணவர்கள்,
அடிப்படைச் சுகாதார மருத்துவப் பயிற்சிநெறி,
சுகவாழ்வுக்கான பயணம்.
(C-3588)



## நீங்களும் விண்ணப்பிக்கலாம்

எமது நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள உளசமூகப்பணிப் பயிற்சி நெறிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☛ எதிர்பார்க்கப்படும் கல்வித்தகைமை: க.பொ.த.(உ.த)
☛ பயிற்சிக்காலம்: 08 மாதங்கள்

பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களில் ஒரு பிரிவாகவும் செவ்வாய், வியாழன் தினங்களில் மற்றொரு பிரிவாகவும் நடைபெறும். வாரத்தில் ஒரு நாள் களவேலைகளும். செய்முறைப் பயிற்சியும் இடம்பெறும். மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி : 31.10.2009
விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்திசெய்து தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பலாம்.

*விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:*
*இயக்குநர்*
*விழி உளசமூக மேம்பாட்டு அமையம்*
*35, சோமசுந்தரம் அவனியூ*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல: 021-222-9115/0775242129*
(C-3585)



## B.Sc காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

✠ பல்கலைக் கழகத்தினால் புதியஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
✠ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
✠ A/L-ல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி எய்தியவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராகுவர்.
✠ இக்கற்கைநெறியானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
✠ பரீட்சைகள் யாவும் எமது புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.
✠ விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

*யாழ். இணைப்பாளர்.*
*காமராசர்*
*பல்கலைக்கழகம் (மதுரை)*

*புதிய உயர்கல்லூரி.*
*ஆரியகுளம் சந்தி.*
*யாழ்ப்பாணம்.*

T.P No: 222 8148, 222 3208
(3812)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.